**MSSRF – NABARD**

# Rural Innovation Fund – Mobile Based Dissemination of Information on Agriculture And Allied Activities to Farmers Thanjavur District

Supported by

National Bank for Agriculture and
Rural Development (NABARD)

Jamsetji Tata National Virtual Academy (NVA)
M S Swaminathan Research Foundation (MSSRF)
Chennai















**Success Case Studies of Farmers (Tamil)**
**Village Resource Centre - Thanjavur**



# முன்னுரை

ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தேசிய இணைய கல்வி கழகம் 2004-ம் ஆண்டு முதல் விவசாய நண்பர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக தகவல் தொழில் நுட்பத்தின் உதவியுடன் பல்வேறு வகையில் வேளாண் தகவலை வழங்கி வருகிறது. இதன் முக்கிய பகுதியாக தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் கிராம அறிவு மையங்கள் மற்றும் கிராம வள மையங்கள் மூலமாக விவசாய பெருமக்களின் தேவைகளை கண்டறிந்து, தகவல் சேவை மூலமாகவும், விழிப்புணர்வு மற்றும் பயிற்சி வழங்குதல், விற்பனை வாய்ப்புகளை உருவாக்குதல், சந்தையாளர்களுடன் தொடர்புப் படுத்துதல், வானிலை தகவல்களை முன்னரே வழங்குதல் போன்ற பணிகளை செவ்வனே செய்து வேளாண் பெருமக்களின் வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைதரத்தையும் உயர்த்தி வருகிறது.

இப்பணிகளின் ஒரு பகுதியாக, குக்கிராமத்தின் கடைகோடி எல்லை வரை புகுந்து சாதாரண விவசாய பெருமக்களையும் சென்றடையும் வகையில் நவீன தகவல் தொழில் நுட்பத்தின் உதவியுடன் தஞ்சாவூர் மாவட்டத்தில் நபார்டு வங்கியுடன் இணைந்து நூற்றி ஐம்பது விவசாயிகளுக்கு பரிசோதனை முறையில் கடந்த ஓராண்டாக மொபைல் போனில் ஒலி மற்றும் எழுத்து வடிவிலான குறுஞ்செய்திகளை அனுப்பி வருகிறோம். இத்தகவல் சேவை எந்தளவுக்கு வேளாண் மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை அறிய, சேவையை பெற்றுவரும் சில விவசாயிகளின் விளைநிலத்தில் நேரடியாக களம் கண்டோம். இந்த களம்காணலில் தகவல் சேவையை பெறும் விவசாயிகள் வழங்கப்படும் தகவல் மூலம் பொருளாதாரத்திலும், வாழ்க்கைதரத்திலும் பல மடங்கு பயன்பெற்று வருகிறார்கள் என்பதையும், பல்வேறு மாற்றத்தை உருவாக்கி இருக்கிறது என்பதையும் விவசாயிகளின் அனுபவ வார்த்தைகளின் மூலம் நேரடியாக அறிந்துக் கொள்ள முடிந்தது.

இந்த தகவல் சேவையின் முக்கிய பங்காளராக உள்ள நபார்டு வங்கிக்கும், தகவல் சேவையை சிறப்பாக வழங்கிய திருவையாறு கிராம வள மையத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. முத்துக்குமார், தகவலை தொகுத்து எளிய தமிழில் வழங்கி வரும் திரு. முருகன், குறுஞ்செய்திகளை தொகுத்து வழங்கும் செல்வி. சுஜிதா மற்றும் செல்வி. தமிழ் இலக்கியா, விவசாயம் மற்றும் பல்வேறு தகவல்களுக்கு ஆலோசனை வழங்கி வரும் திரு. வ.பழனியப்பன் மற்றும் திரு. லெட்சுமிநாராயணன் அவர்களுக்கும், வேளாண் பெருமக்களை நேரடியாக சந்தித்து பயனடைந்த விதத்தை தொகுத்தும், புகைப்படமெடுத்தும் வழங்கிய திரு.சிலம்பரசன், திரு.சந்திரசேகரன், திரு.கார்த்திகேயன் மற்றும் திரு.பழனிவேல், புத்தக வடிவில் வடிவமைத்த திரு. கோலப்பதாஸ், திரு. சக்திவேல் முருகன் மற்றும் இதனை அச்சு வடிவில் கொண்டு வர உதவிய திரு. சிவக்குமார் அவர்களுக்கும், இத்தகவல் சேவை திட்டத்திற்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய திரு. ஸ்ரீநாத் மற்றும் திரு. ராஜ்குமார் அவர்களுக்கும், இத்திட்ட கண்காணிப்பு குழு உறுப்பினர்களாகவும், ஆலோசனை குழுவிலும் இருந்து பெரியளவில் ஆதரவையும், ஆலோசனைகளை வழங்கிய திரு. ரவிக்குமார் (நபார்டு வங்கி), திரு. பாலசுப்ரமணியன் (வேளாண் இணை இயக்குனர்), டாக்டர்.சந்திரசேகரன் (தலைவர் மற்றும் பேராசிரியர், SWMRI), டாக்டர்.புண்ணியமூர்த்தி (தலைவர் மற்றும் பேராசிரியர், VUTRC), திருமதி.சிவகாமி, வேளாண் உதவி இயக்குனர் ஆகியோருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ச. செந்தில்குமரன்**
இயக்குநர் - தகவல், கல்வி மற்றும் தொடர்பு பிரிவு
ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

## Project Monitoring and Review Committee (PMRC) Members

Mr .V. Balasubramanian
Joint Director of Agriculture,
JDA office,
Kattuthottam, Thanjavur – 613 501
Tel: 04362 267680

Dr. B. Chandrasekaran
Professor and Head,
Soil and Water Management and
Research Institute (SWMRI),
Kattuthottam, Thanjavur – 613 501
Tel: 04362 267679

Dr. N. Punniamurthy
Professor and Head
Veterinary University Training and
Research Centre
Nanjikkottai road
Thanjavur - 613 006
Tel: 04362 255462

Mr. S. T. Ravikumar
District Development Manager
NABARD,
No.A1, Municipal colony
Medical college road,
Thanjavur – 613 007
Tel: 04362 241418

Mr. R. Rajkumar
Senior scientist
M.S.Swaminathan Research Foundation
39, Kattiyavayal,
Rajagopalapuram Post,
Pudukkottai District-622 003.
Tel: 04322 236252; 9344282232

Mr. M. Muthukumar
Scientist
M S Swaminathan Research Foundation
No: 82, North Street, Thiruvaiyaru
Thanjavur Dist. 613 204
Tel: 04362 261633, 9344225965

Mr. M. S.Ganesan
NVA Fellow, Farmer
Maharajapuram, Thiruvaiyaru tk.
Thanjavur Dt.
Mobile: 97914 04686

Ms. R. Kanagavalli
NVA Fellow, Farmer
2 / 571, Nadu theru, Soorakottai
Thanjavur Dt.
Mobile: 97914 04774

Ms. R. Kalaivani
NVA Fellow, Farmer,
Vadakku kadavarayar street
Kallar Pasupathikovil
Thanjavur Dt.
Mobile: 9025274876

Mr. S. Vengatesan
NVA Fellow, Farmer
Sannathi theru, Elangadu & post
Thanjavur Dt.
Mobile: 92457 76326

## பெயர்: திருமதி. அலங்காரமேரி அருள்தாஸ்



**கிராமம்: இராஜேந்திரம் ஆற்காடு**
**செல் நம்பர்: 9159583722**

"நானும் என் கணவரும் விவசாய கூலி வேலை செய்துவருகிறோம். எங்களுக்கு இரண்டு மகள்களும், ஒரு மகனும் இருக்கிறார்கள். நான்கு ஆடுகளையும், இருபத்தி ஐந்து கோழிகளையும் வீட்டில் வளர்த்து வருகிறோம்.

கடந்த 3 மாதமாக என் மகள் நதியாவின் செல் போனுக்கு திருவையாறையிலிருந்து ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும், நபார்டு வங்கியும் இணைந்து பேசும் வழியில் மொபைல் போனில் செய்தி கொடுக்கிறார்கள். அதில் விவசாய செய்திகள், கால்நடைகள் பற்றிய செய்திகள் தினமும் வந்து கொண்டிருக்கின்றன. செய்தி வரும்போது என் மகள் ஸ்பீக்கரில் போட்டுவிடுவாள். அதன் மூலம் கடந்த ஏப்ரல் 5, 6 தேதிகளில் எங்கள் வீட்டில் உள்ள கோழிகளுக்கு கழிச்சல் நோய் ஏற்பட்டது. கழிச்சல் நிற்பதற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கழிச்சல் நோய் தாக்குதலால் கோழிக்குஞ்சுகள் இறந்தும் போயின. அப்போது தான் 8 ந் தேதியன்று கோழிகளுக்கு கழிச்சல் நோய் ஏற்படுவதை தடுக்க மருத்துவக்குறிப்பு செய்திகள் கொடுத்திருந்தார்கள். செல்போன் மூலம் செய்தி வந்ததும் உடனடியாக எங்களால் மருந்தின் பெயரைத்தான் தெரிந்து கொள்ளமுடிந்தது. அளவுகள் மீண்டும் சரியாக தெரிந்து செய்வதற்காக 9344225965 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு தெரிந்துக் கொண்டோம். அவர்கள் சொன்ன மருந்து விவரம் இது தான்! (10 கோழிகளுக்கான மருந்துகள்)

| | | |
|---|---|---|
| ஜீரகம் | - | 2 டீஸ்பூன், |
| கீழாநெல்லி | - | 2 கைப்பிடி, |
| சின்ன வெங்காயம் | - | 4 பல், |
| மஞ்சள் தூள் | - | 1 ஸ்பூன், |
| முருங்கை தளை | - | 2 கைப்பிடி, |
| பூண்டு | - | 2 பல் |

இந்த மூலிகைப்பொருட்கள் அனைத்தையும் தூளாக்கி அரிசி குருணையில் கலந்து கோழிகளுக்கு வைக்கணும். கோழிகள் குருணையுடன் மருந்தையும் சேர்த்து தின்றுவிடும். கழிச்சல் குணமாகும். கழிச்சல் வராத கோழிகளுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கண்ட மருத்துப்பொருட்களை அரைத்து தீவனத்துடன் வைத்தால் கோழிகளுக்கு கழிச்சல் நோய் வராது என தஞ்சாவூர் கால்நடைப்பல்கழைக்கழக தலைவர் மற்றும் பேராசிரியர் டாக்டர் புண்ணியமூர்த்தி அவர்கள் தெரிவித்த செய்தியினை தெரிந்துகொண்டு அதன்படி கோழிகளுக்கு அரிசிக்குருணையுடன் கலந்து வைத்தேன். கோழிகள் அவற்றை சாப்பிட்டது. கழிச்சல் வருவது ஒரு நாளில் நின்று போனது. இதனால் எங்கள் வீட்டில் 15 கோழிகளை காப்பாற்ற முடிந்தது. ஒரு நாட்டுக்கோழி விலை 200 ரூபாய் என வைத்துக் கொண்டால் கூட 15 கோழிக்கு 3000 ரூபாய் வரும். இந்த இழப்பை தவிர்த்து விட்டோம். இந்த செய்தியை நான் பயன்படுத்துனது இல்லாம எங்கள் வீட்டுக்கு அருகில் உள்ளவர்களுக்கும் தெரியப்படுத்தினேன். மொபைல் போன் மூலம் முக்கியமான செய்திகள் கொடுத்ததற்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் அலங்காரமேரி.



## விவசாயி: திரு. அன்பரசன்

**கிராமம்: பசுபதிகோவில்**
**அலைபேசி: 9629747983**

"என்னுடைய வயலில் வாழை, நெல், உளுந்து, எள் சாகுபடி செய்து வருகிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் எனது மொபைல்போனுக்கு வானிலை செய்திகள், விவசாய செய்திகள், மார்க்கெட் தகவல்கள் கொடுக்கிறாங்க. மேலும் கால்நடை வளர்ப்பு, மூலிகை மருத்துவம் செய்வது பற்றிய தகவல்களும் கொடுக்கிறாங்க. தற்போது ஏடிடி 49 நெல் சம்பாவில் சாகுபடி செய்திருந்தேன். அதில் நெல் பயிர் மஞ்சள் நிறமாகவும் சூறை விழுந்ததுபோலும் இருந்தது. இதற்கு என்ன செய்வது என உதவி எண் மூலம் கேட்டேன். அதற்கு உடனே திரு லெட்சுமிநாராயணன் அவர்கள் நெல் பயிர் மஞ்சள் நிறமாக இருப்பதற்கு ஜிங்க்சல்பேட் ஏக்கருக்கு ஒரு கிலோவை 80 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் கலந்து தெளிக்கச்சொன்னார்கள். மேலும் சூறை விழுந்தது போல இருந்ததற்கு மானோகுரோட்டோபாஸ் ஏக்கருக்கு 400 மிலியை தெளிக்கவேண்டும் என தெரிவித்தார்கள். அதன்படி செய்தேன்.

சரியான நேரத்தில் நெல்பயிருக்கு மருந்து அடித்து காப்பாற்றியதால் எனக்கு ஏக்கருக்கு 27 மூட்டை நெல் கிடைத்தது. ஆனால் செலவு என்று பார்த்தால் மருந்து வாங்கியது, ஸ்பிரே செய்ய ஆள்கூலி ஆக ரூ.500/- செலவு ஆனது. இதனால் 27 மூட்டை ரூ.16200 [1 மூட்டை நெல் ரூ.600/-] கிடைத்தது. நான் வாழையும் சாகுபடி செய்கிறேன். நான் வாழைத்தாரினை திருவையாறு, தஞ்சாவூரில் உள்ள ஏலக்கடைகளில் தான் விற்பனை செய்துவருகிறேன்.

சந்தை நிலவரத்தில் திருச்சியில் வாழைத்தார் விலை எவ்வளவுக்கு போகிறது என்பதை தெரிந்துகொண்டு, அப்போது திருவையாறு, தஞ்சாவூரில் வாழைத்தார் எவ்வளவுக்கு விலை போகிறது என விசாரித்துவைத்துக்கொண்டு இரண்டுக்கும் உள்ள வேறுபாடு பார்த்து வாழைத்தார் விற்பனை செய்துவந்தேன். இங்கு வாழைத்தார் விலை குறைவாக இருந்தபோது நான் திருச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் எடுத்துக்கொண்டுபோய் விற்பனை செய்து இருக்கிறேன். சென்ற மாதம் [டிசம்பர் மாதம் 2011] வாழைத்தார் நல்ல விலைக்கு விற்றேன். ஒரு பூவன் வாழைத்தார் ரூ.220/- விற்பனை செய்தேன். அப்போது திருவையாறு மார்க்கெட்டில் பூவன் வாழைத் தார் ரூ.100/-க்குதான் விலைபோனது. அப்போது 50 வாழைத்தார்களை திருச்சிக்கு எடுத்துக்கொண்டுபோய் [1 X 220, 50 X 220 =11000] ரூ.11000/- விற்பனை செய்தேன். இந்த விபரம் தெரியாமல் திருவையாறில் விற்பனை செய்திருந்தால் ஒரு வாழைத்தார் ரூ.100/- வீதம் 50 தார் ரூ.5000/-க்கு தான் விற்பனைச் செய்திருப்பேன். சரியான நேரத்தில் மார்க்கெட் செய்தி தெரிந்து வாழைத்தார் விற்பனை செய்ததால் ரூ.6000/- கூடுதலாக லாபம் கிடைத்தது. விவசாயிகளுக்கு சந்தை நிலவரம் பற்றி கொடுக்கும் செய்தியும் முக்கியமானது. என்கிறார் அன்பரசன்.

## விவசாயி: திரு. எம். பாலகிருஷ்ணன்



**கிராமம்: இலுப்பக்கோரை**
**அலைபேசி : 8098172606**

"எனது மொபைல் போனுக்கு திருவையாறு சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் ஐந்து மாதமாக பயனுள்ள செய்திகள் கொடுத்துவருகிறார்கள். விவசாயிகளுக்கு தேவையை அறிந்து செய்தி கொடுக்கிறாங்க. வாய்ஸ் செய்தியும், எழுத்து செய்தியும் வருகிறது. விவசாயச்செய்திகள், கால்நடை பற்றிய செய்திகள், குறுவைக்கு ஏற்ற விதைகள் பற்றிய செய்திகள் வருகிறது. எழுத்தில் வானிலை அறிக்கை, மேட்டூர் நீர்மட்டம், சந்தை நிலவரம் வருகிறது.

இந்த நேரத்தில் நான் என் வயலில் எள் சாகுபடி செய்திருந்தேன். எனது வயல் காவிரி ஆற்றிற்கு அருகில் உள்ளது. எனது மொபைல் போனுக்கு தினமும் வானிலை அறிக்கை, மேட்டூர் அணையின் நீர்மட்டம் அணையியிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவது பற்றி வந்துகொண்டிருக்கிறது. மழை அளவு, மேட்டூரில் நீர் வருவது தெரிந்துகொண்டதால் இதனால் அவசரப்படாமல் எள் பயிரினை நன்கு முற்றி அறுவடை செய்தேன்.

இந்த விபரம் தெரியவில்லையென்றால் ஆற்றில் தண்ணீர் வந்துவிடும், மழை வரும் என்று பயந்து முன்கூட்டியே அறுவடையை செய்திருப்பேன். வானம் நன்கு மூடி இருக்கும், மழை பெய்கிற மாதிரி இருக்கும், மொபைல் போனில் மழை இல்லை என்று வரும். அதன்படியே ஒரு துளி கூட விழாமல் மேகம் களைந்துவிடும். இதையெல்லாம் கவனித்து எள் அறுவடை செய்தேன். தற்போது குறுவைக்கு ஏற்ற விதை சொன்னார்கள். அதன்படி ஏடிடி 43 விதை இரகம் வாங்கி, குறுவை சாகுபடி செய்ய விதை விட்டிருக்கிறேன். நாற்று விட்டு 15 நாள் ஆகிறது.

இவ்வாறு பல்வேறு வகையில் உதவிகரமாக இருப்பதால் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். 2 ஏக்கருக்கு நல்ல தரமான 6 குவிண்டால் எள் கிடைத்தது. ஒரு கிலோ எள் விலை 50 ரூபாய் என 600 கிலோவிற்கு 30,000 ரூபாய் கிடைத்தது. இந்த வானிலை அறிக்கை கிடைக்காமல் இருந்தால் சரியாக விளையாத, முதிர்ச்சியடையாத எள் 500 கிலோ கிடைத்திருக்கும். சந்தையில 1 கிலோ எள் விலை 40 ரூபாய்க்கு தான் போகும். மொபைல் செய்தியால் எனக்கு 10,000 ரூபாய்- அதிகமாக கிடைத்திருக்கிறது. என்கிறார் பாலகிருஷ்ணன்.



## விவசாயி: திரு. துரை பாண்டியன்

**கிராமம்: கண்டியூர்**
**அலைபேசி: 9488112161**

"நான் திருவையாறு அடுத்த கண்டியூரில் வசித்துவருகிறேன். விவசாயம், நெல் உளுந்து, பயறு, எள் சாகுபடி செய்து வருகிறேன். எனது மொபைல்போனுக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் குரல் வழியில் இரண்டு தகவல்கள், எழுத்து வழியில் இரண்டு தகவல்கள் கொடுகிறார்கள். இந்த தகவல்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. எனது மொபைல்போனுக்கு 20.09.11 அன்று உளுந்து பயிர் மற்றும் பயறுவகை பயிர்களுக்கு வானிலை காப்பீடு திட்டம் வந்துள்ளது பற்றியும், இதில் சேரக்கடைசி நாள் 3.10.2011 என்று செய்தி வந்தது. மேலும் திட்டம் பற்றி திருவையாறு கிராம வளமையத்துக்கு தொடர்புகொண்டு பயறு வகை பயிர்களுக்கு வானிலை காப்பீடு திட்டம் பற்றி தெரிந்து பிரிமியம் செலுத்தி ஒரு ஏக்கருக்கு 2000 ரூபாய் இழப்பீடும் கிடைத்தது. மேலும் பயிர்க்காப்பீடு செய்வது பற்றி தெரிவித்து, பிரிமியம் செலுத்த கடைசி நாள் அறிந்து பிரிமியமும் செலுத்தியிருக்கிறேன்.

வானிலை பற்றிய தகவல் அனுப்புவது பயனுள்ளதாக இருக்கிறது. மழை பெய்வது பற்றி தெரிந்துகொண்டு விவசாய வேலை செய்யமுடிகிறது. மழை பெய்யும் என செய்தி வந்தால் அன்று வயலுக்கு மருந்து அடிப்பதை நிறுத்திக்கொண்டு அடுத்த மழை இல்லை என்று வரும்போது வயலுக்கு மருந்து தெளிக்கிறேன். மழை அறிவிப்புக்கு ஏற்ப வேலை செய்துகொள்கிறேன்.

மேலும் பல்வேறு கீரைகளை பற்றியும் தகவல் சொல்றாங்க. கடந்த வாரம் வெந்தயக்கீரையின் மகத்துவம் பற்றி தெளிவாக சொன்னாங்க. வெந்தயக்கீரையில் இவ்வளவு பயன் இருக்கிறது என்று இப்பத்தான் தெரிந்துகொண்டேன். கம்பு கூழ், கேள்வரகு கூழ் அதில் உள்ள பயன்கள் பற்றி தெரிந்துகொண்டேன்.

வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டம் குறித்த தகவல் அவ்வப்போது தெரிவிக்கிறாங்க. இதில் சிறு, குறு விவசாயி குறித்த விபரம் வேளாண்மைத்துறை மூலம் சேகரிப்படுவது குறித்த தகவல் தெரிவித்தார்கள். அதன்படி நான் வேளாண்மைத்துறை அலுவலகத்திற்கு சென்று எனது பெயரை சிறுவிவசாயி என பதிவு செய்துகொண்டேன்.

மேலும் 10.08.2011 அன்று சம்பா, தாளடி விதைகள் சி.ஆர்.1009 விதை வேளாண்மைக்கிடங்குகளில் விற்பனை செய்யப்படுகிறது என்ற விபரம் அறிந்துகொண்டேன். தாங்கள் சொல்லும் செய்திகளை அவ்வப்போது மற்ற விவசாயிகளுக்கும் தெரிவிக்கிறேன்" என்கிறார் துரை பாண்டியன்.

## விவசாயி: திரு. கணேசன்



**கிராமம்: குழிமாத்தூர்**
**அலைபேசி: 9442583492**

"நான் நடுக்காவேரி அடுத்த குழிமாத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான்கு ஏக்கரில் விவசாயம் நெல், உளுந்து, எள் சாகுபடி செய்துவருகிறேன். எனக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் எனது மொபைல்போனுக்கு இரண்டு செய்திகள் பேசும் வழியிலும், இரண்டு செய்தி எழுத்து வடிவிலும் கொடுக்கிறாங்க. ஒரு விவசாயிக்கு தேவையான முக்கியமான செய்தியை தொடர்ந்து கொடுக்கிறாங்க. நெல், உளுந்து, எள் சாகுபடி பற்றிய செய்தி கொடுப்பதுடன், போனின் புரோகிராம் மூலம் துறை சார்ந்த அலுவலர்களை போன் மூலம் தொடர்பு கொண்டு பயிர் சம்பந்தப்பட்ட கேள்விகளை கேட்டு தெரிந்துக் கொள்ளவைக்கிறார்கள்.

சென்ற கோடையில் ஏப்ரல் மாதம் உளுந்து, பயறு, எள் சாகுபடி பற்றிய போனின் புரோகிராம் நடத்தினாங்க. நான் அப்போது எள் சாகுபடி செய்திருந்தேன். எள் செடி பூக்கள் கொட்டாமல் காய்கள் அதிகம் பிடிக்க என்ன மருந்து தெளிக்கவேண்டும் என தகவல் கேட்டேன். அதற்கு ஆராய்ச்சியாளர் பிளானோபிக்ஸ் என்ற பயிர் ஊக்கியை 100 லிட்டர் நீருக்கு 45 மில்லி என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கவேண்டும். இவ்வாறு செய்தால் பூக்கள் அதிகம் பிடிக்கும், அதிகமாக காய்களும் வைக்கும் என சொன்னார்கள். அதன்படி மருந்து தெளித்தேன். ஏக்கருக்கு 3 மூட்டை எள் கிடைத்தது. முன்பெல்லாம் 2 மூட்டை எள் தான் கிடைக்கும் தற்போது ஒரு கிலோ எள் 50 ரூபாய் வீதம் 100 கிலோ எள் 5000 ரூபாய் லாபம் கிடைத்தது.

மேலும் சென்ற மாதம் 20 ந்தேதி குறுவை பயிர் சாகுபடி பற்றிய போனின் புரோகிராம் நடந்தது. அதில் நானும் கலந்துகொண்டேன். நான் ADT 36 நெல் நடவு செய்து 30 நாள் பயிர் நிலையில் கருகிப் போய் உள்ளது. இதற்கு என்ன செய்வது என கேட்டேன். இதற்கு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து சரியாக பதில் சொன்னாங்க. சென்ற வாரத்தில் நிலவிய அதிக வெப்பம் காரணமாக இந்நிலை ஏற்பட்டிருக்கலாம் என்றும், தற்போது மழைக்குப்பின் மாறி விடும். தேவைப் பட்டால் 10 கிலோ என்ற அளவில் மேலுரம் இடவும். யூரியாவுடன் ஜிப்சம் அல்லது வேப்பம் புண்ணாக்கு கலந்து இடுவது சிறந்தது என்று சொன்னாங்க. அதன்படி தற்போது 2 களை எடுத்து இந்த உரத்தை எல்லாம் போட்டு இருக்கேன். பயிர் நன்கு வாளிப்பாக உள்ளது.

திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிக்கும் செய்தி ஒவ்வொன்றும் மிக முக்கியமாக இருக்கிறது. நான் வயலில் இருக்கும்போது மற்ற விவசாயிகளுக்கும் மொபைல்போனுக்கு செய்திவருவதை தெரிவித்து கேட்கச்சொல்வேன். மற்ற விவசாயிகளும் ஆர்வத்தோடு இந்த செய்தி எங்கள் மொபைல் போனுக்கும் வரவேண்டும் என்று சொல்கிறார்கள்" என்கிறார் கணேசன்.



## விவசாயி: திரு. ஞானசேகரன்

**கிராமம்: அம்மன்பேட்டை**
**அலைபேசி: 9600230177**

"நான் அம்மன்பேட்டை கிராமத்தில் வசித்துவருகிறேன். எனது மொபைல் போனுக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து தினமும் தகவல் வந்துகொண்டிருக்கிறது. எழுத்துவழியில் இரண்டு தகவல்கள் வருகின்றன. இதில் வானிலை பற்றிய தகவல், மேட்டூர் நீர்மட்டம், சந்தை நிலவரம் போன்ற செய்திகளும், பேசும் வழியில் இரண்டு செய்திகளில் விவசாயம், கால்நடை மருத்துவம், அரசு திட்டங்கள் பற்றி பயனுள்ள தகவல்கள் வந்துகொண்டு இருக்கிறது. மொபைல் போனில் கால்நடைகளை பராமரிப்பு செய்வது பற்றிய தகவல், முதலுதவியில் மூலிகை மருத்துவம் செய்வது, சினைமாடுகள் பராமரிப்பு செய்வது பற்றியும் பயனுள்ள தகவல் கொடுக்கிறார்கள். நாங்கள் ஓரளவிற்கு கால்நடையை பார்த்துக்கொள்கிறோம். இருந்தாலும் போன் மூலம் தாங்கள் சொல்லும்போது தனி சிரத்தை எடுத்துக்கிட்டு கால்நடை பராமரித்துவருகிறேன். நாங்கள் அன்றாடம் பல காய்கறிகளை உணவாக பயன்படுத்தி வருகிறோம். மருத்துவ குணங்கள் பற்றி தெரிந்தும் பயன்படுத்துறது இல்லை. ஆனால் செய்தியில் குறிப்பிட்ட காய்கறிகள் பயன் பற்றியும் அதை சாப்பிடுவதால் மனிதர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றியும் தெரிவிக்கும்போது எங்களுக்கு வியப்பாக இருக்கிறது. அதன்படி கடந்தவாரம் புடலங்காயில் உள்ள மருத்துவக்குணங்கள் பற்றியும் அதை சாப்பிடுவதால் மனிதர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி சொன்னாங்க. பயன் பற்றி முழுமையாக தெரிந்து காய்கறி வாங்குகிறேன்" என்கிறார் ஞானசேகரன்.



## விவசாயி: திரு. கார்த்திகேயன்

**கிராமம்: மேலப்புனல்வாசல்**
**அலைபேசி: 9600654653**

"நான் மேலப்புனல்வாசல் கிராமத்தில் வசித்துவருகிறேன். எனக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் SMS மூலம் முக்கியமான தகவல் கொடுக்கிறார்கள். என் மொபைல்போனுக்கு வரும் ஒவ்வொரு செய்தியும் மிகவும் முக்கியமானவை. என் மொபைல்போனில் ஒரு நாள் வேளாண்மை சிறு, குறு விவசாயிகள் பெயர் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்றும், பதிவு செய்யாதவர்கள் வேளாண் அலுவர்களை அணுகி பதிவு செய்துகொள்ளவேண்டும் என்றும் சொன்னார்கள். நான் அதன்படி திருவையாறு வேளாண்மைத்துறை அலுவலகத்திற்கு சென்று எனது பெயரை சிறு விவசாயி பெயர்ப்பட்டியலில் சேர்த்துக்கொண்டேன். மேலும் இந்த செய்தியை 10 விவசாயிகளுக்கும் தெரியப்படுத்தினேன். மிக்க நன்றி" என்கிறார் கார்த்திகேயன்.

## விவசாயி: திரு. கோவிந்தராஜ்



**கிராமம்: கீழப்புனல்வாசல்**
**அலைபேசி : 9442289101**

"நான் எட்டு ஏக்கர் நிலத்தில் நெல், எள், உளுந்து சாகுபடி செய்து வருகிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் எனது மொபைல்போனுக்கு 5 மாதமாக செய்திகள் கொடுத்து வருகிறார்கள். இதில் விவசாயத்தில் எள் சாகுபடி, உளுந்து சாகுபடி, நெல் சாகுபடி என பலவிதமான தகவல் தருகிறார்கள். தற்போது மழை பெய்த ஈரத்தை பயன்படுத்தி வயலுக்கு தழை உரப்பயிர்கள் தெளிக்கவேண்டும் என செய்தி கொடுத்தார்கள். தழை உரப்பயிர்கள் தெளிப்பதால் மண்ணில் அங்கக சத்துக்கள் கூடி அதிக வளத்துடன் இருக்கும் எனவும், சாகுபடி செய்யும் நெல் பயிர் நல்ல மகசூல் கிடைக்கும் என தகவல் சொன்னார்கள். எனது செல்போனில் மழை பெய்யும் என வானிலை அறிக்கை வந்தது. அப்போது வாய்ஸ் செய்தியாக தற்போது பெய்துள்ள கோடை மழை ஈரத்தை பயன்படுத்தி தழை உரம் தெளிக்கச்சொன்னார்கள். அதன்படி என் வயலுக்கு தக்கைப்பூண்டு தெளித்து இருக்கிறேன். தக்கைப்பூண்டு நன்கு வளர்ந்து ஆள் உயரத்திற்கு வளர்ந்தும் வந்துள்ளது. இதை மடக்கி உழவு செய்து குறுவை நடவு செய்ய இருக்கிறேன். சணப்பு வளர்ந்துள்ளதைப்பார்த்து பக்கத்தில் உள்ள வயல் விவசாயிகள் வரும் வருடம் நெல் விளைச்சல் அதிகம் கிடைக்கும் என்கிறார்கள்.

இதற்கு முன் தழை உரப்பயிர்கள் தெளித்ததில்லை. தற்போது எனது மொபைல்போனில் அடிக்கடி சொன்னதால் இந்த மாதிரி செய்திருக்கிறேன். வானிலை அறிக்கை செய்தியின்படி மழைக்கு பின் தெளித்ததால் தெளித்தவிதைகள் அனைத்தும் நன்கு முளைத்துவிட்டது. மற்ற விவசாயிகளை விட 20 நாள் முந்தியதால் ஏக்கருக்கு சராசரியாக 2 டன் தழை உரம் கூடுதலாக கிடைத்தது. இதன் பின் விளைவு குறுவையில் இரசாயன உரத்தை குறைத்தும், பூச்சி நோய் இல்லாத மகசூல் வந்தது. இதன் மதிப்பீடு என்று பார்க்கும் போது ஒரு ஏக்கருக்கு 2000 ரூபாய்- வீதம் 8 ஏக்கருக்கு 16,000- ரூபாய் கூடுதலாக கிடைத்திருக்கிறது" என்கிறார் கோவிந்தராஜ்.



## விவசாயி: திரு. குணசேகரன்

**கிராமம்: மணத்திடல்**
**அலைபேசி: 9159583722**

"எங்களுக்கு நான்கு ஏக்கர் நிலம் உள்ளது. இதில் ஒரு ஏக்கரில் வெற்றிலை பயிரையும், மூன்று ஏக்கரில் நெல், உளுந்து, எள் சாகுபடியும் செய்து வருகிறேன். எனக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் கடந்த நான்கு மாதமாக என்னுடைய மொபைல்போனுக்கு எழுத்து வடிவில் இரண்டு செய்திகளும், ஆடியோ வாய்ஸில் இரண்டு செய்திகளும் கொடுக்கிறார்கள். சந்தை நிலவரம், வானிலை அறிக்கை, விவசாய செய்திகள், கால்நடை வளர்ப்பு செய்திகள், மருத்துவச்செய்திகள், திட்டங்கள் பற்றிய செய்திகள், படிப்பு, வேலைவாய்ப்பு போன்ற பல முக்கியமான செய்திகள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இப்போது என்ன திட்டம் வந்துள்ளது? இப்போது சாகுபடி செய்துள்ள பயிரை எப்படி பராமரிக்கவேண்டும்? என்றெல்லாம் தகவல் கொடுக்கிறார்கள். நான் வயலில் வேலை செய்துகொண்டிருக்கும்போது செய்தி வரும். அப்போது சக விவசாயிகளும் கேட்கும்படி செய்தியினை ஸ்பீக்கரில் போட்டுவிடுவேன். இதைக்கேட்டு பல விவசாயிகளும் அடிக்கடி இப்போது என்ன முக்கியமான செய்தி வருகிறது என கேட்கிறார்கள். நான் தினம் வரும் செய்தியினை தெரிவிக்கிறேன்.

கடந்த பிப்ரவரி மாதம் 22ந்தேதி, 2011 அன்று எனது மொபைல்போனுக்கு விவசாயி அடையாள அட்டை பெறுவது பற்றிய செய்தி வந்தது. இந்த செய்தியில் விவசாயி அடையாள அட்டை அந்தந்த பகுதி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கொடுப்பதாகவும், விவசாயி அடையாள அட்டை பெறுவதற்கு என்னென்ன ஆவணங்கள் எடுத்துச் செல்லவேண்டும் எனவும் தெரிவித்தார்கள். அதன்படி மேலும் விபரங்களை 9344225965 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு தேவையான ஆவணங்களான பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, பிறந்த நாள், வயது, ஆண்டு, மின் இணைப்பு எண், பட்டா அல்லது சிட்டா அடங்கல் ஜெராக்ஸ், பேங்க் பாஸ்புத்தகத்தின் ஜெராக்ஸ் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு திருவையாறு வேளாண்மை உதவி இயக்குநரை அணுகினேன். விவசாயி அடையாள அட்டை எனக்கும், என் மனைவிக்கும் வாங்கிவிட்டேன்.

இதற்கு முன் வங்கியில் விவசாயக்கடன் பெறுவதற்கும், மான்யத்தில் உரங்கள் வாங்கும்போதும் கிராம நிர்வாக அலுவலரிடம் சிட்டா அடங்கல் அல்லது கம்ப்யூட்டர் சிட்டா வாங்கிக்கொடுக்கவேண்டும். இந்த ஆவணங்கள் வாங்குவதற்கு இரண்டு மூன்று நாட்கள் அலைந்து வாங்கவேண்டும். ஆனால் தற்போது உளுந்து விதை, டிஏபி உரம் வாங்க சிட்டா அடங்கல், கம்ப்யூட்டர் சிட்டா வாங்காமல், விவசாயி அடையாள அட்டையை காண்பித்து வாங்கினேன். இதனால் இரண்டு அல்லது மூன்று நாட்கள் அலைச்சல் இல்லாமல் போனது" என்கிறார் குணசேகரன்.

## விவசாயி: திருமதி. கலைவாணி



**கிராமம்: பசுபதிகோவில்**
**அலைபேசி: 9025274876**

"நான் பாபநாசம் தாலுக்கா பசுபதிகோவில் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான்கு ஏக்கர் நிலத்தில் நெல், எள் சாகுபடி செய்துவருகிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து ஒரு வருடமாக என் செல்போனுக்கு முக்கியமான தகவல்கள் எல்லாம் கொடுக்கிறாங்க. விவசாய செய்திகள், கால்நடைகளுக்கு மூலிகை மருத்துவம் செய்வது பற்றிய தகவல், பயிற்சி, கருத்தரங்குகள் நடைபெறுவது பற்றிய தகவல், விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ப போனின் புரோகிராம் நடைபெறுவது பற்றியும், போனின் புரோகிராம் நிகழ்ச்சியில் வல்லுநர்கள் பதில்களை தெரிவிப்பது பற்றியும் விபரமாக தெரிவிக்கிறாங்க. சம்பா, தாளடி நெல் சாகுபடி பற்றிய போனின் புரோகிராம் இப்ப நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டு, எனக்கு தேவையான கேள்விகளை கேட்டு பதில்களை தெரிந்துகொண்டேன்.

நான் தற்போது சம்பாவில் ADT 46, ADT 49 போன்ற நெல் விதை இரகம் நடவு செய்து முதல் களை எடுத்துள்ளேன். சென்ற வருடம் நெல் சாகுபடி செய்திருந்தபோது நெல்பழம் நோய் வந்தது அதை மனதில்கொண்டு, இந்த வருடம் நெல் பழ நோய் வராமல் தடுக்க என்ன முன்கூட்டியே என்ன மாதிரியான தடுப்பு நடவடிக்கை எடுக்கணும் என கேள்வி கேட்டேன். அதற்கு ஆலோசகர் லெட்சுமிநாராயணன் அவர்கள் நெல் பயிரில் பூட்டை கட்டும் தருணத்தில் இரண்டுமுறை மாங்கோசெப் மருந்து 30 கிராமை 10 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும் என்று சொன்னார்கள். ஆலோசகர் சொன்னது நெல் பயிர் பஞ்சு கட்டும் தருணத்தில் மேற்கண்ட மருந்தை தெளித்து விட்டேன். தற்போது நெல் பயிரில் நெல் பழம் நோய் தாக்காமல் பயிர் நன்றாக உள்ளது. இன்னும் 10 நாளில் நெல் அறுவடை செய்யப்போகிறேன். விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் போனின் புரோகிராம் நடத்துவதால் எங்களுடைய சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொள்ளமுடிகிறது. எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் திருமதி. கலைவாணி.



## விவசாயி: திருமதி. கலையரசி

**கிராமம்: விளாங்குடி**
**அலைபேசி: 9442346333**

"நான் விளாங்குடி கிராமத்தில் வசித்துவருகிறேன். என்னிடம் மூன்று ஏக்கர் நிலம் உள்ளது. நெல் மற்றும் எள் சாகுபடி செய்து வருகிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் எனது மொபைல்போனுக்கு விவசாயத்தகவல், மருத்துவத்தகவல், பயனுள்ள மூலிகைகள் கால்நடை மருத்துவத்தகவல் பற்றியெல்லாம் தகவல் தெரிவிக்கிறார்கள். நாங்கள் இதுவரைக்கும் முருங்கைக்கீரை, மணத்தத்தக்காளி கீரையை சாதாரணமாகத்தான் பயன்படுத்தி வருகிறோம். தற்போது திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் நாம் சாப்பிடும் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் தெரிவித்து அதில் உள்ள சத்துக்கள், அதன் மருத்துவ குணங்கள், அது மனிதர்களுக்கு எந்தெந்த முறையில் பயன்படுகிறது என்பதை முழுமையாக தெரிவிக்கிறாங்க. இதனால் முருங்கைக்கீரை, மணத் தக்காளி, வெந்தயம், வெந்தயக்கீரையின் மகத்துவம் தெரிந்து பயன்படுத்துகிறேன். இந்த செய்தியினை என் வீட்டுக்கு அருகில் உள்ளவர்களுக்கும், உறவினர்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

விவசாயத்தில் நெல் விதைநேர்த்தி செய்து விதைப்பது பற்றியும், நெல் நடவு பற்றியும் தெரிவிக்கிறாங்க. மேலும் ஆராய்ச்சியாளர்களுடன் போனின் புரோகிராம் மூலமாக விவசாயிகள் பேச வைக்கிறாங்க. கடந்த மாதம் எங்கள் வீட்டில் எள் சாகுபடி செய்திருந்த போது போனின் புரோகிராம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். அப்போது எள்ளில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த தகவல் கேட்டேன்.

இதில் எள்ளில் மாவுப்பூச்சி தென்படுகிறது. இதை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்தும், மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி அட்டை இருக்கிறதா? என்பது குறித்தும் கேட்டேன்.

மாவு பூச்சியை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கிடைக்கிறது. இதனை வாங்கி பயன்படுத்தலாம். இரசாயனத்தின் மூலம் கட்டுப்படுத்த ரோகார் 400 மில்லி + மண்ணெண்ணை 50 மிலி அல்லது பிஷ் ஆயில் ரெசின் 250 கிராம் இவற்றை 100 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவேண்டும் என ஆலோசனை சொன்னார்கள்.

இவர்களின் ஆலோசனையின்படி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் தஞ்சாவூர் காட்டுத்தோட்டம் மண் மற்றும் நீர்மேலாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தில் ஒட்டுண்ணி அட்டை வாங்கி கட்டினேன். மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த முடிந்தது" என்கிறார் கலையரசி.

## விவசாயி: திரு. கருணாநிதி



**கிராமம்: கீழப்புனல்வாசல்**
**அலைபேசி : 9944745692**

"நான் இரண்டு ஏக்கரில் நெல், உளுந்து, எள் சாகுபடி செய்து வருகிறேன். என் செல்போனுக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து விவசாயிகளுக்கு தேவையான, பயன்படக்கூடிய செய்திகள் கொடுக்கிறாங்க. இந்த செய்தியில தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலம் 2010 டிசம்பர் 31-ந்தேதியுடன் முடிவடைகிறது. இந்த குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலத்தை வருகிற 31-ந்தேதிக்கு பிறகு நியாய விலைக்கடைகளில் ஓராண்டு காலத்திற்கு பொருட்கள் வாங்கும் வகையில் இலவசமாக உள்தாள்களை இணைக்க தற்போது அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்றும், அதன்படி எந்தெந்த குடும்ப அட்டைகளுக்கு எந்தெந்த தேதியில் உள்தாள்கள் இணைக்கப்படும் என்ற கால அட்டவணை சம்பந்தப்பட்ட அங்காடியில் ஒட்டப்பட்டு உள்ளது. அதன்படி குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டையை சம்பந்தப்பட்ட அங்காடிக்கு எடுத்துச்சென்று உள்தாள்கள் ஒட்டிக்கொள்ளலாம் என்றும் குறிப்பிட்ட தேதியில் உள்தாள்கள் ஒட்டிக்கொள்ள இயலாத குடும்ப அட்டைதாரர்கள் இம்மாதத்திலேயே 29, 30 ஆகிய தேதிகளில் உள்தாள்கள் ஒட்டிக்கொள்ளலாம் என்று 27-12-2010 அன்று மொபைல் குரல் வழி செய்தியாக சொன்னாங்க. நான் 30-ந்தேதி தானே கடைசி தேதி அதற்குள்ள உள்தாள்கள் இணைத்துக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன்.

இந்த நிலையில் என் உறவுக்காரர்கள் வீட்டிற்கு வேலை விஷயமாக வெளியூர் சென்றுவிட்டு 30 ந்தேதிதான் ஊருக்கு வந்துவிட்டு வயலுக்கு போய் வேலைகள் பார்த்துக்கொண்டு இருந்தேன். இதனால் எனக்கு குடும்ப அட்டைக்கு உள்தாள்கள் இணைத்துக்கொள்வதை சுத்தமாக மறந்துவிட்டேன். அன்று காலை 11-00 க்கு நான் வயல்வேலை செய்து இருந்துகிட்டு இருந்தப்ப செய்திகள் எழுத்து வழியில் SMS கொடுத்திருந்தாங்க. அதில் குடும்ப அட்டைக்கு உள்தாள்கள் இணைத்துக்கொள்ள இன்று கடைசிநாள், குடும்ப அட்டையுடன் ரேசன் கடைக்கு சென்று உடனடியாக உள்தாள்கள் இணைத்துக்கொள்ளலாம் என செய்தியை அனுப்பி இருந்தார்கள். இந்த எஸ்எம்எஸ் செய்தியைப்பார்த்து உடனே ரேசன் கடைக்கு சென்று உள்தாள்கள் இணைத்துக்கொண்டேன். இந்த செய்தி தெரியாமல் இருந்திருந்தால் அன்று உள்தாள்கள் இணைப்பு செய்யமுடியாமல் போயிருக்கும். எனக்கு சரியான நேரத்தில் சரியான தகவல் கொடுத்த திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

சரியான நேரத்தில் என்னுடைய மொபைல்போனுக்கு செய்தி கொடுத்தால் அதை தெரிந்துகொண்டு, எந்த அலைச்சலும் இல்லாமல் ஒரு 10 நிமிடத்தில் குடும்ப அட்டையில் உள்தாள்கள் இணைத்து வாங்கினேன். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மிக்க நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் கருணாநிதி.



## விவசாயி: திரு. குமார்

**கிராமம்: திருப்பழனம்**
**அலைபேசி: 9940780700**

"நான் மூன்று ஏக்கரில் நெல், உளுந்து, சாகுபடி செய்து வருகிறேன். எனது மொபைல்போனுக்கு திருவையாறு, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்து பேசுகிற வாய்ஸ் செய்தி இரண்டு, எழுத்து செய்தி இரண்டும் தினமும் தவறாமல் வந்து சேர்ந்து விடுகிறது. சம்பா சாகுபடி சமயத்தில் செய்திகள் பூச்சி கட்டுப்பாடு செய்திகள், உளுந்து சாகுபடி, எள் சாகுபடி செய்திகள், கல்வி செய்திகளில் என்ன படிக்கலாம் என்று பல்வேறு தகவல்களும், மேலும் திருவையாறு ஆபீஸில் நடைபெறும் நிகழ்ச்சிகள் குறித்தும் சொன்னார்கள். இதில் திருவையாறு அலுவலகத்தில் மேல் படிப்பிற்கான ஆலோசனை நிகழ்ச்சி நடைப்பெறுவதாக சொன்னார்கள். என் குழந்தைகள் 10 ஆம் வகுப்பு படித்திருக்கிறார்கள்.

இந்த செய்தி கேட்டு என் குழந்தைகளையும், அக்கம் பக்கத்தில் உள்ள 12 ஆம் வகுப்பு முடித்தவர்களிடமும் தெரிவித்து கூட்டத்தில் கலந்துகொள்ளச்செய்தேன். என் பிள்ளைகள் 11 ஆம் வகுப்பில் எந்த பிரிவில் சேர்ந்து படிக்கணும் என கேட்டதற்கு காமர்ஸ் கோர்ஸ் படிக்க அறிவுறுத்தி இந்த கோர்ஸ் படித்தால் மேற்கொண்டு பி.காம்., எம்.காம்., படிக்கலாம். இதனால் வங்கி, நிதி நிறுவனங்களில் வேலை கிடைக்கும் என அறிவுரை கூறி இருக்கிறாங்க. படிக்கும் குழந்தைகள் தாங்கள் என்ன படிப்பு படிக்கின்றோம் என்பது பற்றியும், பிற்காலத்தில் தாங்கள் படிப்பின் மூலம் என்னமாதிரியான வேலைவாய்ப்பு கிடைக்கும் என அறிந்து அவர்கள் வாழ்க்கையை நிர்ணயித்துக்கொள்ள உதவி இருக்கிறார்கள்" என்கிறார் குமார்.



## விவசாயி: திரு. சங்கர்

**கிராமம்: கீழத்திருப்பூந்துருத்தி**
**அலைபேசி: 9952439720**

"நான் ஐந்து ஏக்கர் நிலத்தில் நெல், உளுந்து, பயறு, எள் சாகுபடி செய்துவருகிறேன். எனது மொபைல்போனுக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் பேசும் வழியில் இரண்டு தகவல்கள், எழுத்துவழியில் இரண்டு தகவல்கள் கொடுகிறார்கள். இந்த தகவல் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. எனது மொபைல் போனுக்கு பயறுவகை பயிர்களுக்கு வானிலை காப்பீடு திட்டம் வந்துள்ளது பற்றியும், இதில் சேரக்கடைசி நாள் 3-10-11 என்று செய்தி வந்தது. மேலும் திட்டம் பற்றி திருவையாறு கிராம வளமையத்துக்கு தொடர்புகொண்டு பயறு வகை பயிர்களுக்கு வானிலை காப்பீடு திட்டம் பற்றி தெரிஞ்சுக்கிட்டேன். அதற்கான விண்ணப்பத்தை வாங்கி பூர்த்தி செய்வது கேட்டு அறிந்து இரண்டு ஏக்கர் நிலத்துக்கு 938 ரூபாயை பிரிமியமாகவும் செலுத்தினேன். ஒரு செய்தி கொடுப்பதுடன் அதன் தொடர்புடைய விபரங்களை விவசாயிகளுக்கு தெளிவாக சொல்கிறார்கள். சரியான செய்தியாகவும் கொடுக்கிறாங்க. இப்படி இந்த பயறுவகை பயிர்களுக்கு வானிலை காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்தேன். கிராம வள மையத்தின் மூலம் சரியான தகவல்கள், விவசாயிகளுக்கு இன்சூரன்சில் புதிய திட்டங்கள் சரியான நேரத்திற்கு ஏற்ற செய்திகள் கொடுத்து வருகிறார்கள். மிக்க நன்றி " என்கிறார் சங்கர்.

## விவசாயி: திரு. மணிமாறன்



**கிராமம்: பனையூர்**
**அலைபேசி: 9698577999**

"நான் திருவையாறு அடுத்த பனையூர் கிராமத்தில் வசித்துவருகிறேன். என்னிடம் நான்கு ஏக்கர் நிலம் இருக்கிறது. இதில் நெல், வாழை, எள் சாகுபடி செய்துவருகிறேன். என் மொபைல்போனுக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் முக்கியமான செய்திகள் ஆறு மாதமாக வந்துகொண்டு இருக்கிறது. இதில் டெக்ஸ்ட் மெசேஜ்களாகவும், வாய்ஸ் மெசேஜ்களாகவும் முக்கியமான செய்திகள் வந்து சேர்கின்றன. வாய்ஸ் மெசேஜில் மாசிப்பட்டத்தில் எள் சாகுபடி செய்வது பற்றியும், அவ்வப்போது மழை பெய்ய வாய்ப்பு பற்றியும் தகவல் தெரிவிக்கிறாங்க. இதனால மழை இருக்கும் என்று சொன்ன அன்றைக்கு நான் எள் பயிருக்கு தண்ணீர் பாய்ச்சாமல் இருந்தேன். அதேபோல் அன்று நல்ல மழை பெய்தது. தண்ணீர் பாய்ச்ச செலவு ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் விதம் நாலு ஏக்கருக்கு 2000 ரூபாய் மிச்சமானது. இந்த தகவல் கிடைக்காமல் தண்ணீர் பாய்ச்சியிருந்தால் களிமண் வயலில் தண்ணீர் நின்று எள் பயிரின் வேர் அழுகி வீணாகிப்போயிருக்கும். இது தவிர்க்கப்பட்டது.

மேலும் சந்தை நிலவரம் திருச்சியில் வாழை இலை, வாழைக்காய் விற்பனை விபரம் தெரிவிக்கிறாங்க. திருச்சியை விட திருவையாறு பகுதியில் வாழை குறைவாக விற்கும் அன்றைக்கு திருச்சிக்கு வாழைக்காய்களை எடுத்துச்சென்று விற்பனை செய்தேன். கோடையில் பெய்த மழை ஈரத்தை பயன்படுத்தி சணப்பு, தக்கைப்பூண்டு தலை உரப்பயிர்கள் சாகுபடி செய்யச்சொன்னாங்க. இதனால் மண் வளம் பாதுகாக்கப்படும் என்றும் சொன்னாங்க. அதன்படி என் வயலில் தக்கைப்பூண்டு தெளித்தேன். தற்போது பயிர் நன்றாக வளர்ந்துள்ளது. மிகவும் பயனுள்ள செய்தி கொடுக்கிறாங்க. மிக்க நன்றி" என்கிறார் மணிமாறன்.



## விவசாயி: திரு. ஆர். மணியன்

**கிராமம்: புனல்வாசல்**
**அலைபேசி: 8098261016**

"ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும், நபார்டு வங்கியும் இணைந்து வழங்கும் விவசாய செய்திகளைத் தினமும் எனது மகள் பார்த்து எனக்கு தெரிவிப்பாள். இதன் மூலம் அடுத்தடுத்த நாட்களின் காற்றின் வேகம், மழையின் அளவு, வெப்பநிலை போன்றவற்றையும் தெரிந்துக் கொள்வேன்.

தற்போது ஆடுதுறை 46 நடவு செய்து 35 நாள் ஆகிறது. நெல் பயிரில் இலைக்கருகல் நோய் வந்துள்ளது. இந்த நோயைத் தடுப்பதற்கு தகவல் கேட்டு 28-12-2010 அன்று மருந்து வாங்கி வயலுக்கு அடிக்க இருந்தேன். 28-12-2010 அன்று வானிலை அறிக்கையில் அடுத்த நாள் 10.5மி.மீ மழை பெய்யும் என செய்தி கொடுத்திருந்தார்கள். 29-12-10 அன்று காலை 10 மணிக்குப்பிறகு பயிருக்கு மருந்து தெளிக்கவும் எடுத்துச்சென்றேன். வயலுக்கு மருந்து அடிப்பதற்கு ஸ்பிரேயர், மருந்து எல்லாம் எடுத்துக்கொண்டு வயலுக்கு சென்றேன். காலை 9- மணி வரை வானம் நன்றாக இருந்தது. 10 மணிக்குப்பிறகு வானத்தில் கருமேக மூட்டம் அதிகரிக்கத் தொடங்கியது. 11மணிக்கெல்லாம் நல்ல மழை பெய்யத்தொடங்கியது. இதனால் மருந்தை அடிக்காமல் வீட்டுக்கு ஸ்பிரேயர், மருந்தை எடுத்துவந்து அடுத்த நாள் வானம் தெளிந்த அன்று மருந்து அடித்தேன். வானிலை அறிக்கையின் அறிவுரையின் படி வாங்கிய மருந்தை அடிக்காமல் தவிர்த்தலால் 2 ஏக்கர் நிலத்திற்கு மருந்து செலவு 900 ரூபாய், [காப்பர் ஆக்ஸிகுளோரைடு 600 ரூபாய், அக்ரிமைசின்- 300 ரூபாய்] மற்றும் அன்றைக்கு என்னுடைய உடல் உழைப்பு மிச்சயமானது" என்கிறார் மணியன்.




## விவசாயி: திரு. எஸ். சச்சிதானந்தம்

**கிராமம்: விளாங்குடி**
**அலைபேசி: 9176950243**

"எனக்கு MSSRF மூலம் எனது மொபைல்போனுக்கு தினமும் செய்திகள் வருகிறது. பேசும் வழியில் இரண்டு செய்திகளும், எழுத்து வழியில் சந்தை நிலவரம், மேட்டூர் அணையின் நீர்மட்டம், வானிலை பற்றிய தகவல்களை கொடுக்கிறார்கள். இதன் மூலம் மழை அளவை தெரிந்துகொண்டு அதற்கு ஏற்ப வயல் வேலையை தொடங்க எளிதாக இருக்கிறது. மேலும் விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிரில் தனக்கு உள்ள சந்தேகத்தை நேரடியாக பயிர் சம்பந்தப்பட்ட அதிகாரியோட போன் மூலமாக கேட்டு தெரிஞ்சுக்கலாம். போனின் புரோகிராம் நடத்துறப்போ எங்களோட சந்தேகத்தை அதிகாரிகளிடம் கேட்டு தெரிஞ்சுக்க முடியுது. எனது மொபைல் போனுக்கு வரும் செய்தியைப் பார்த்து மற்ற விவசாயிகளும் இந்த மாதிரி செய்திவருவதற்கு என்ன செய்யவேண்டும் என கேட்கிறார்கள்" என்கிறார் சச்சிதானந்தம்.

## விவசாயி: திரு. மனோகரன்



**கிராமம்: கீழப்புனல்வாசல்**
**அலைபேசி: 9443781698**

"நான் தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தாலுக்கா, கீழப்புனல்வாசல் கிராமத்தில் வசித்துவருகிறேன். விவசாயத்தை முழு ஈடுபாட்டுடன் செய்துவருகிறேன். எங்களுடைய எட்டு ஏக்கரில் நெல், எள், உளுந்து சாகுபடி செய்துவருகிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மூலம் என்னுடைய செல்போனுக்கு பேசும் வழியில் இரண்டு செய்திகளும், எழுத்து வழியில் இரண்டு செய்திகளும் கொடுத்துவருகிறார்கள். விவசாயிகளுக்கு கொடுக்கும் செய்திகள் மிகவும் பயன் தரக்கூடிய செய்திகள். வானிலை பற்றிய செய்தி கொடுப்பது மிகவும் முக்கியமானது. வானிலை செய்தியில் மழை இருக்கிறதா, இல்லையா என பார்த்து விட்டு அதற்கு ஏற்ப வேலையை மாற்றி செய்கிறேன். மழை இல்லாத அன்று வயலுக்கு மருந்து அடிப்பது, தண்ணீர் பாய்ச்சுவது போன்ற வேலையை செய்துகொள்வேன். முன்பெல்லாம் வானிலை செய்தி தெரியாமல் வயலுக்கு சென்று நெல் பயிருக்கு மருந்து அடித்துவிட்டு வீட்டு வருவேன். அன்று மழைபெய்து பயிருக்கு போட்ட மருந்தெல்லாம் மழைத்தண்ணீரால் அடித்து செல்லப்பட்டு மருந்து வீணாகிவிடும். ஒரு ஏக்கருக்கு ரூ.600/- செலவு செய்து, நெல் பயிருக்கு பூச்சியை கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் 400 மிலி அடித்தேன்.

இப்ப எந்த பயமும் இல்லாம வயல் வேலையை செய்ய முடியுது. எந்த வேலை செய்வதற்கு முன்பே வானிலைத் தகவலை பார்த்துவிட்டு செய்வதால் வீண் செலவு ஏற்படாம தடுத்துக்கொள்ளமுடியுது. வானிலைத்தகவலில் வரும் செய்தியை நான் தெரிந்துகொள்வதோடு எனக்கு விவசாயிகளிடமும் தெரிவிக்கிறேன். மேலும் பேசும் வழியில் அவ்வப்போது பயிருக்கு ஏற்படும் பூச்சி, நோய்களை கட்டுப்படுத்தவும், பயிர்களை பாதுகாத்து பராமரிக்க பயனுள்ள தகவல்களை கொடுக்கிறாங்க. இதற்காக எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் மனோகரன்.



## விவசாயி: திரு. மனோகரன்

**கிராமம்: இராஜேந்திரம்**
**அலைபேசி: 9994019550**

"நான் நெல், உளுந்து, எள் சாகுபடி செய்து வருகிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் என்னுடைய மொபைல் போனுக்கு ஒரு வருடமாக பயனுள்ள செய்திகளை பேசும் வழியிலும், எழுத்து வழியில் வானிலைத்தகவல்கள், மேட்டூர் நீர்மட்டம், சந்தை நிலவரம் கொடுக்கிறாங்க. மேலும் மாதத்திற்கு இரண்டு போனின் புரோகிராம் நிகழ்ச்சிகள் வல்லுநர்களைக் கொண்டு நடத்துறாங்க. இதில் விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்த பயிர்பற்றிய கேள்விகளைக்கேட்டு ஆராய்ச்சியாளரிடம் நேரடியாக பதில்களை தெரிந்துகொள்ளவும் செய்கிறாங்க. மேலும் மொபைல் போனில் பயனுள்ள மருந்துவ செய்தியும் கொடுக்கிறாங்க.

மழைக்காலத்தில் கொசுக்கள் அதிகமாக இருந்தது. கொசுவை கட்டுப்படுத்த கொசுவர்த்தியைத்தான் உபயோகித்து வந்தோம். அப்போது எனது மொபைல் போனுக்கு கொசுவை கட்டுப்படுத்த தகவல் சொன்னாங்க. கொசுக்கடி தாங்காமல் நிறையபேர் கடையிலிருந்து கொசுவர்த்தி வாங்கி கொழுத்தி விடுறாங்க. இந்த கொசுவர்த்தி குழந்தைகளுக்கு ஒத்துக்காது. ஆஸ்துமா உள்ளவுங்க, பிரஷர், சுகர் உள்ளவுங்க, வயதில் முதியவர்களுக்கு கொசுவர்த்தி மணமும், புகையும் ஒத்துக்காது. கொசுக்களை கட்டுப்படுத்த உடனடியாக வீட்டை சுற்றியும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளணும். செடி, கொடிகள், புல் போன்றவற்றை வெட்டி அப்புறப்படுத்தனும். கொசுக்கடியிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும் வேப்ப எண்ணெய், இலுப்ப எண்ணெய், புங்க எண்ணெய், இவற்றுடன் நல்ல எண்ணெய், கொஞ்சம் விளக்க எண்ணெய் சம அளவில் சேர்த்து அகல் விளக்கில் ஊற்றி திரி போட்டு எறிய விட வேண்டும். திரி எரிந்து மூலிகை எண்ணெயின் வாடை வீட்டைச் சுற்றி வரும். இதனால் கொசுக்கள் வீட்டிலிருந்து வெளியேறிவிடும் என்று சொன்னாங்க. செய்திகள் சொன்னபோது நன்றாக தெளிவாக சொன்னாங்க. நன்றாக புரிந்துகொள்ளவும் முடிந்தது.

அதன்படி நான் கடைக்கு சென்று வேப்ப எண்ணெய், இலுப்ப எண்ணெய், புங்க எண்ணெய், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் வாங்கி சம அளவில் கலந்து அகல் விளக்கில் ஊற்றி எரியவிட்டேன். செய்தியில் சொன்னபடி கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கொசுக்கள் இல்லாமல் போனது. என்னுடைய வீட்டில் இந்த முறையை பயன்படுத்தி செய்துவருகிறேன். நல்ல செய்தி. கொசுவை விரட்ட உடலுக்கு நன்மை செய்யும் இந்த முறை சிறப்பானது.

நான் இந்த மாதிரி கொசுவை விரட்ட அகல் விளக்கு எரியவிடுவதை எங்கள் வீட்டுக்கு வரும் சொந்தக்காரர்களும் இந்த முறையை கேட்டு செய்கிறாங்க. விலைமதிக்கமுடியாத உயிர் நலத்தை பாதுகாக்கவும் ஆலோசனை கொடுக்கிறாங்க. எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் மனோகரன்.

## பெயர்: செல்வி.V. நதியா



**கிராமம்: அம்மாள்கிராமம், திருவையாறு**
**அலைபேசி: 9159583722**

“நான் எம்.எஸ்சி இயற்பியல் படித்து விட்டு திருவையாறு அடுத்த அம்மாள்கிராமத்தில் என் அப்பா [வரதராஜன்], அம்மாவுடன் [உதயராணி] வசித்துவருகிறேன். என் அப்பா, அம்மா இருவரும் விவசாயகூலி வேலை செய்கிறார்கள். நான் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் வீட்டில் இருந்தேன். என் நண்பர்களிடம் கம்ப்யூட்டரில் வேலை செய்வேன். ஏதாவது உங்களுக்கு தெரிந்த நிறுவனத்தில் கம்ப்யூட்டரில் வேலை செய்ய ஆட்கள் தேவை என்று கேட்டால் சொல்லுங்கள் என்று சொல்லி இருந்தேன்.

அப்போது தான் என் தோழியின் அம்மா திருமதி ரேவதி அவர்களின் மூலம் அவருடைய மொபைல்போனில் திருவையாறில் கம்ப்யூட்டரில் வேலை செய்ய ஆள் கேட்கிறார்கள் நீங்கள் வேலைக்கு செல்கிறீர்களா என்று கேட்டார்கள். அப்போது அவர்களிடம் நான் விபரம் கேட்டபோது அவர்களுடைய செல்போனுக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்து அவர்களுடைய மொபைல்போனுக்கு text messaage மூலம் வேலைவாய்ப்பு பற்றிய தகவல்கள் கொடுத்ததாக சொன்னாங்க. வேலைவேண்டும் என்றால் திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சென்று கேளுங்க என்று சொன்னாங்க.

நான் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வந்து கேட்ட போது திருவையாறு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கம்ப்யூட்டரில் பணிபுரிய ஆள் கேட்கிறார்கள். மாதம் ரூ.3000/- சம்பளம் கொடுப்பார்கள். வேலை நேரம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை எனக்கூறினார்கள். நான் என், அப்பா, அம்மாவின் அனுமதியுடன் வேலையில் சேர்ந்தேன். நான் வேலை செய்யும் இடம் எனது ஊருக்கு அருகில் உள்ளதால் பஸ் கட்டணம் என்ற செலவு இல்லாமல் சைக்கிளிலேயே சென்று வருகிறேன். இதனால் அலைச்சல் இல்லாமலும், பயம் இல்லாமலும் வேலைக்கு சென்றுவர முடிகிறது. மாத சம்பளம் ரூ.3000/-வாங்கி என் அம்மாவிடம் கொடுப்பேன். என் சம்பளம் குடும்ப செலவிற்கு உதவியாக இருப்பதாக என் அம்மா, அப்பாவும் சொல்லி சந்தோஷப்படுகிறார்கள். எனக்கு இந்த வேலையை வாங்கிக்கொடுத்த திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் நதியா.



## விவசாயி: திரு. பாண்டியன்

**கிராமம்: கீழப்புனல்வாசல்**
**அலைபேசி: 9944810369**

“நான் 4 ஏக்கர் நிலத்தில் நெல், உளுந்து, பயறு, எள் சாகுபடி செய்துவருகிறேன். நான் தற்போது குறுவையில் ஏடிடி 36 நடவு செய்துள்ளேன். பயிர் நன்கு கதிர் வந்துள்ளது. வயல் அறுவடை செய்வதற்கு இன்னும் 30 நாள் ஆகும். ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் கொடுக்கும் செய்தியில் விதை நேர்த்தி ஏன் செய்யணும், விதை நேர்த்தி செய்வதால் கிடைக்கும் நன்மை பற்றி சொல்வதால் எனக்கு ஒரு ஊக்கம் கொடுக்கிறமாதிரி இருக்குது. இதனால் நான் இந்த முறை விதை நேர்த்தி செய்து விதைத்து நடவு செய்திருக்கிறேன். மேலும் சூடோமோனாஸ் போடுறதால என்ன நன்மை இருக்குன்னு அவ்வப்போது சொல்றாங்க. இதனால் சூடோமோனாஸ் போட்டும் பயிரை கவனமாக பார்த்துக்கொள்கிறேன்.

சென்ற மாதம் பயிரில் பூச்சி மாதிரி தென்பட்டது. அப்போது பயிருக்கு மருந்து அடிக்கலாம் என திட்டமிட்டிருந்தேன். அன்று மொபைல்போனில் மழை இருப்பது பற்றி செய்திவந்தது. இதனால் மருந்து அடிக்காமல் இருந்துவிட்டேன். பிறகு அடுத்த ஒரு நாள் மழை இல்லாதபோது மருந்து அடித்தேன். எனக்கு செய்திவருவதால் மழை இருக்கா? இல்லையா? என பார்த்துக்கிட்டு விவசாய வேலை செய்ய வசதியாக இருக்குது.

மேலும் 19-09-2011 அன்று வந்த செய்தியில், வானம் சற்று மேகமூட்டத்துடன் இருக்கும். மழை பெய்ய வாய்ப்பு இருக்கும் என்று சொன்னாங்க. இதனால் நெல் பயிருக்கு அதிகம் தண்ணீர் கட்டாமல் பயிரை புகையான் பூச்சியின் தாக்காமல் பயிரை கண்காணிக்க வேண்டும் என சொன்னாங்க. அதேபோல அன்று வானம் மேகமூட்டமாகத்தான் இருக்குது.

செய்தியில் சொன்னபடி நெல் பயிரை கண்காணித்துவருகிறேன். இன்னும் 30 நாட்களில் நெல் அறுவடை செய்துவிடுவேன். நான் முதன் முதலாக விதைநேர்த்தி செய்தேன். நெல் மணிகள் தரமானதாக இருந்தது. சரியான நேரத்தில் நெல் பராமரிப்பு தொடர்ந்து செய்துவருவதால் ஓரளவிற்கு விளைச்சலும் நன்றாக இருந்தது. எனக்கு ஏக்கருக்கு 45 மூட்டை [60 கிலோ கொண்ட மூட்டை] நெல்லும் கிடைத்தது. ஒரு மூட்டை நெல் 600 ரூபாய் என 45 மூட்டை ரூ.27,000 ரூபாய் விற்பனை ஆனது. இதற்கு முன்பு ஏக்கருக்கு 30 மூட்டை நெல் தான் கிடைக்கும்.

தற்போது எனக்கு கூடுதலாக 15 மூட்டை நெல் கிடைத்துள்ளது. இதன் மூலம் 9000 ரூபாய் கூடுதல் லாபம் கிடைத்தது. திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் விவசாயிகளுக்கு தொடர்ந்து பயன் தரும் செய்திகளை அனுப்பி வருகிறாங்க. நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் பாண்டியன்.



## விவசாயி: திருமதி. எம். புஷ்பா

**கிராமம்: இராஜேந்திரம்**
**அலைபேசி: 9790537036**

“நான் இராஜேந்திரம் கிராமத்தில் வசித்துவருகிறேன். என்னிடம் சொந்தமாக ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறது. இதில் நெல் சாகுபடியும், உளுந்து சாகுபடியும் செய்து வருகிறேன். கூடவே வீட்டில் ஒரு கறவை மாட்டினையும் பராமரித்து வருகிறேன். மாடு கன்று ஈன்று ஆறு மாதம் ஆகிறது. திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்து என் மொபைல்போனுக்கு தினமும் பல பயனுள்ள செய்திகளை கொடுக்கிறாங்க. நெல் சாகுபடிபற்றிய தகவல்கள், எள் சாகுபடி, உளுந்து சாகுபடி, அரசு நலத்திட்டங்கள், பயிற்சிகள் நடைபெறுவது பற்றியும் தகவல் கொடுக்கிறாங்க. எனக்கு மொபைல்போனுக்கு வந்த செய்தியில் கால்நடைகளுக்கு முதலுதவி மூலிகை மருத்துவத்தின் மூலம் மருத்துவம் செய்யும் செய்தி மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

எனது மாட்டிற்கு திடீரென கழிச்சல் ஏற்பட்டது. இதற்கு மருந்துக்கடையில் மருந்து கேட்டு மாட்டிற்கு கொடுத்தேன். கழிச்சல் நிற்கவில்லை. அப்போது தான் என் மொபைல்போனுக்கு [29-08-2011] கால்நடைகளுக்கு ஏற்படும் கழிச்சல் நோயை கட்டுப்படுத்த தகவல் சொன்னாங்க. கால்நடைகளில் நீர்த்த, துர்நாற்றமுடைய கழிச்சல் காணப்படும். வால் மற்றும் பின்னங்கால்களில் சாணக்கறை படிந்து காணப்படும். உடல்களிலுள்ள நீர்ச்சத்து மற்றும் தாது உப்புக்கள் அதிகமாக வெளியேறி கன்றுகள் சோர்ந்து காணப்படும் என அறிகுறிகளை தெரிவித்து ஒரு மாட்டிற்கு தேவையான மருந்துகள் ஒரு கன்றுக்கு தேவைப்படும் மூலிகை மற்றும் மருந்து பொருட்கள்:

**கலவை-1** சின்ன சீரகம்-15 கிராம், கசகசா-15 கிராம், வெந்தயம் -15 கிராம், மிளகு -5 எண்ணிக்கை, பெருங்காயம்-5 கிராம் எடுத்து எடுத்து நன்கு கருகும் வரை வறுத்து இடித்து கொள்ள வேண்டும்.

**கலவை-2** வெங்காயம் -10 பல், பூண்டு -6 பல், புளி -200 கிராம், கருப்பட்டி -250 கிராம் (பனை வெல்லம்) பொருட்களை நன்கு அரைத்து கொள்ள வேண்டும்.

**சிகிச்சை முறை:** (வாய் வழியாக) இந்த இரு கலவைகளையும் கலந்து சிறு சிறு உருண்டைகளாக்கி கல் உப்பினில் தொட்டு ஒரே வேளையில் அனைத்து உருண்டைகளையும் நாக்கின் வழியாக உள்ளே செலுத்த வேண்டும் என கால்நடைப் பல்கலைகழக தலைவர் டாக்டர் புண்ணியமூர்த்தி அவர்கள் சொன்ன தகவலை தெரிவித்தாங்க. இந்த முறையை பின்பற்றி எனது கால்நடைகளுக்கு மருந்து தயாரித்து கொடுத்தேன். கழிச்சல் நின்று போனது. சாதாரணமாக வீட்டில் கிடைக்கக்கூடிய பொருட்களைக்கொண்டே எளிமையான முறையில மருந்து தயாரித்து கொடுக்கும்படி தகவல் கொடுத்தாங்க. விவசாயிகளுக்கு தேவையான சரியான தகவலை கொடுக்கும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் புஷ்பா.



## விவசாயி: திருமதி. ராஜேஸ்வரி

**கிராமம்: பசுபதிகோவில்**
**அலைபேசி: 9842724268**

"நான் என் குடும்பத்துடன் பசுபதிகோவில் கிராமத்தில் வசித்துவருகிறேன். எங்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது. இதில் நெல், உளுந்து, எள் சாகுபடி செய்துவருகிறோம். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் மொபைல்போனில் விவசாயச்செய்திகள், கால்நடை மருத்துவச்செய்திகள், பயிற்சிகள் நடைபெறுவது பற்றியெல்லாம் தெரியப்படுத்துகிறார்கள். பயனுள்ள செய்திகளை கொடுக்கிறார்கள். எனது மொபைல்போனுக்கு இந்தியன் வங்கி 18 முதல் 38 வயது வரை உள்ளவர்களுக்கு சணல் பைகள் தயாரிப்பு பயிற்சி கொடுப்பது பற்றியும் பயிற்சிகள் ஏழு நாட்கள் நடைபெறும் என்றும் பயிற்சி நிறைவில் சான்றிதழ் கொடுப்பார்கள் என்றும் தெரியப்படுத்தினார்கள். அப்போது என் மகள் அனிதா பி.காம்., முடித்து வீட்டில் இருந்தார். என் மகளிடம் தஞ்சாவூரில் உள்ள இந்தியன் வங்கியில் சணல் பைகள் தயாரிப்பு பயிற்சி கொடுப்பது பற்றி மொபைல்போனில் வந்த செய்தியை என் மகளிடம் சொன்னேன். மகளும் சணல் பைகள் தயாரிக்கும் பயிற்சிக்கு ஆர்வத்தோடு செல்வதாக சொன்னார். இந்த பயிற்சியில் கலந்துக் கொண்டு சான்றிதழ் பெற்றுவிட்டார்கள். இளைஞர்களுக்கு சிறு தொழில் பயிற்சி நடைபெறுவதை எல்லாம் தெரிவிக்கும் போது சந்தோஷமாக இருக்கிறது" என்கிறார் திருமதி ராஜேஸ்வரி.



## விவசாயி: திரு. ராஜராஜன்

**கிராமம்: திருவையாறு**
**அலைபேசி: 9894951851**

"நான் திருவையாறில் வசித்துவருகிறேன். எனது மொபைல்போனுக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் தகவல் வழங்கு திட்டத்தின் மூலம் எனது மொபைல்போனுக்கு தகவல் கொடுக்கிறார்கள். மொபைல் போனில் விவசாயிகளுக்கு பயனுள்ள செய்திகள் கொடுக்கிறாங்க. வானிலை செய்திகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. நான் செங்கல் காலவாய் தொழிலும் செய்கிறேன்.

தற்போது திருவையாறு பகுதியில் வானிலை சரியில்லாமல் மாலைப்பொழுது ஆனாலே மப்பும் மந்தாரமாக இருந்துவருகிறது. இந்த நேரத்தில் காலவாய் கொழுத்திவிட வேண்டிய தருணம். ஒன்றரை இலட்சம் செங்கல் கொழுத்திவிடவேண்டும். காலவாய் கொழுத்த கற்களை அடுக்கும் வேலை நடைபெற்று முடிந்தது. காலவாய் அன்று கொழுத்திவிட திட்டமிட்டு இருந்தேன். ஆனால் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் எனது மொபைல் போனுக்கு 10-08-2011 அன்று மழை திருவையாறு பகுதியில் மழை 2.2 மிமீ மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக செய்தி வந்தது. இதனால் 80,000 செங்கல் கொழுத்த இருந்ததை நிறுத்தினேன். அன்று சொன்னது போல் மழையும் பெய்தது. இதனால் ரூ.2,40,000/- மதிப்புள்ள செங்கல் நஷ்டமாவதை தடுக்கமுடிந்தது" என்கிறார் ராஜராஜன்.

## விவசாயி: திரு. இராமலிங்கம்



**கிராமம்: வில்லியநல்லூர்**
**அலைபேசி: 9283240525**

“எங்களிடம் மூன்று ஏக்கர் நிலம் இருக்கிறது. இதில் நெல், எள், உளுந்து, சாகுபடி செய்து வருகிறேன். கோடையில் ஆற்று தண்ணீர் பாசனம் இல்லாமல் போர்வெல் மூலம் தண்ணீர் பாசனம் செய்து தான் நாற்றங்கால் தயாரித்து விதை விடுவேன். நெல் விதைத்த சமயத்தில் மழை பெய்தால் விதைத்த நெல் எல்லாம் மழை தண்ணீரில் அடித்து சென்று எல்லா விதை நெல்லும் ஒரு இடத்திற்கு வந்து நெல்விதை வீணாகிவிடும். நெல் முளைத்து தரையில் வேர் ஊன்றும் வரை மூன்று நாள் வரை மழை இருக்கக்கூடாது. இதற்காக விவசாயிகள் வானத்தைப்பார்த்துக்கொண்டு எப்ப மழை வரும் என்று தெரியாம, பயந்துகிட்டுத்தான் விதை விதைப்பாங்க. ஆனால் இப்ப அந்த பயம் இல்லை. ஏன் என்றால் MSSRF இப்ப விவசாயிகளின் மொபைல்போனில் நாளை மழை இருக்கிறதா இல்லையா, காற்றின் வேகம், வெப்பநிலை, அதிகம் குறைவு, காற்றில் உள்ள ஈரப்பதம் போன்றவற்றை கொடுக்கிறாங்க. இதை தகவலைப்பார்த்து மழை இல்லை என்று தெரிந்துகொண்டு நெல் விதைத்தேன். எந்த பாதிப்பும் இல்லாம நாற்றுகள் நன்றாக வளர்ந்து வந்திருக்கிறது. மேலும் வானிலை தகவல் கொடுப்பது, கோடையில் உளுந்து அறுவடை செய்து, வெயிலில் காயவைத்து அடித்து எடுப்பதற்கும் பயனுள்ளதாக இருக்கிறது.

நான் சென்ற வருடம் சம்பாவில் கோ-43 நெல் சாகுபடி செய்திருந்தேன் அதில் நெற்பழம்நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக என்ன செய்வது? என்றும், கதிர் வரும் தருவாயில் இலைச்சுருட்டுப்புழுவும், குருத்துப்பூச்சியின் தாக்குதல் அதிகமாக உள்ளது. இது தடுக்க என்ன செய்வது? என போனின் புரோகிராம் மூலம் கேட்டேன். அதற்கு ஆராய்ச்சியாளர்கள் நெற்பழ நோய் வராமல் தடுக்க நெல் பழநோய் கட்டுப்படுத்த காப்பர் ஹைட்ராக்ஸைடு 400 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளிக்கவேண்டும். குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்த நடவு செய்த 30, 37, 44 ஆகிய இடைவெளியில் டிரைக்கோடெர்மாகைலோனிஸ் ஜப்பானிக்கம் ஒட்டுண்ணியை கட்டிவைத்து கட்டுப்படுத்தலாம். டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணியை அட்டையை கட்டிவைத்தும் கட்டுப்படுத்தலாம். இந்த மாதிரி நடவடிக்கை எடுத்தும் இலைச்சுருட்டுப்புழு, குருத்துப்பூச்சு கட்டுப்படவில்லை என்றால் புரபனோபாஸ் 400 மிலி 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும் என சொன்னார்கள்.

நான் நெல் பழம் வராமல் தடுக்க காப்பர் ஹைராக்ஸைடு 400 கிராம் தெளித்தேன். மூன்று ஏக்கருக்கு ரூ.1200/- செலவு செய்து மருந்து அடித்தேன். நெல் பழம் நோய் ஓரளவிற்குதான் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இதனால் ஏக்கருக்கு 40 மூட்டை நெல் கிடைக்கவேண்டிய வயலில் 30 மூட்டை நெல் தான் கிடைத்தது. நெல் பழ நோயை கட்டுப்படுத்த மருந்து அடிக்காமல் இருந்ததால் இருந்திருந்தால் ஏக்கருக்கு பத்து மூட்டை நெல் கூட கிடைத்திருக்காது. சரியான நேரத்தில் போனின் புரோகிராம் நிகழ்ச்சியில கலந்துகிட்டு என்னோட பயிரின் நிலையை சொல்லி, நெல் பயிருக்கு பாதிப்பு ஏற்படாம பார்த்துக்கிட்டேன்" என்கிறார் இராமலிங்கம்.



## விவசாயி: திரு. ராமமூர்த்தி

**கிராமம்: செட்டிப்பத்து, பாபநாசம் தாலுக்கா**
**அலைபேசி: 8940626867**

“என்னிடம் இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது. இதில் நெல், உளுந்து சாகுபடியும் செய்து வருகிறேன். மேலும் தென்னைமரங்கள் ஆறுபது இருக்கின்றன. திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் என் மொபைல் போனுக்கு ஏழு மாதங்களாக தினமும் தேவையான பயனுள்ள செய்தி வந்துக் கொண்டிருக்கிறது. விவசாயம் சார்ந்த ஏதேனும் சந்தேகம் இருந்தால் உதவி எண் 9344225965 தொடர்புகொள்ளலாம் என சொல்கிறாங்க. அந்த எண்ணை தொடர்புகொண்டால் நாம் கேட்கிற சந்தேகத்திற்கு உடனடியாக பதிலை சொல்கிறாங்க. அரசின் திட்டங்கள் பற்றியும் சரியான நேரத்தில் சொல்கிறாங்க. சென்ற வருடம் என் வீட்டு தோட்டத்தில் இரண்டு தென்னை மரம் பட்டுப்போனது. மரம் எதனால் பட்டுப்போனது என்று தெரியவில்லை. நன்கு காய்த்துக்கொண்டிருந்த மரம், திடீரென பட்டுப்போனது. இதனால் ரூ.12000/- வரை இழப்பு ஏற்பட்டது.

ஆனால் தற்போது திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் தென்னை மரத்தை பாதுகாக்க தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் தென்னைமரம் காப்பீட்டு திட்டம் இருப்பதை தெரிவித்தார்கள். தென்னை மரத்திற்கு காப்பீடு செய்தால், பாதிப்பு ஏற்படும் சமயங்களில் இழப்பீடு பெற வழிகள் இருப்பதை தெரித்தார்கள். மேலும் நான் உதவி எண் 9344225965 க்கு தொடர்பு கொண்டு தென்னைமரத்திற்கு காப்பீடு செய்ய என்னென்ன ஆவணங்கள் தேவை? விண்ணப்பங்கள் கிடைக்கும் இடம்? ஒரு மரத்திற்கு பிரிமியத்தொகை எவ்வளவு செலுத்தவேண்டும்? என விளக்கமாக சொன்னாங்க. இத்திட்டத்தின் படி 4 வயது முதல் 15 வயது வரை உள்ள மரம் ஒன்றுக்கு காப்பீட்டுத்தொகை ரூ.600/- இதற்கு செலுத்த வேண்டிய பிரிமியம் மரம் ஒன்றுக்கு ரூ 4.69 இதில் மானியம் போக விவசாயி செலுத்த வேண்டிய பிரிமியம் ரூ 1.06/- மட்டுமே.16 வயது முதல் 60 வயது வரை உள்ள மரங்களுக்கு காப்பீட்டுத்தொகை ரூ 1,150 பிரிமியம் ரூ 6.35 மானியம் போக மரம் ஒன்றுக்கு விவசாயி செலுத்த வேண்டிய தொகை ரூ 1.44 மட்டுமே விவசாயி செலுத்தும் பிரிமியம், செலுத்திய மாதத்தின் அடுத்த மாதத்திலிருந்து ஒரு வருடத்திற்கு மட்டுமே உரியதாகும். மீண்டும் காப்பீடு செய்திட மீண்டும் பிரிமியம் கட்டி புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என விபரமாக சொன்னாங்க.

தென்னை மரத்திற்கு காப்பீடு செய்ய விண்ணப்பம் திருவையாறு கிராம வள மையத்தில் வாங்கி உள்ளேன். அதன்படி என்னிடம் உள்ள ஆறுபது மரங்களுக்கும் காப்பீடு செய்ய இருக்கிறேன். இனி வரும் காலங்களில் மரத்திற்கு பாதிப்பு வந்தால் பயப்பட தேவை இல்லை. விவசாயிகளுக்கு திட்டங்கள் பற்றி முழுமையாக தெரிவித்த திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் ராமமூர்த்தி.

## விவசாயி: திருமதி. ரீட்டா



**கிராமம்: இலுப்பக்கோரை**
**அலைபேசி: 9367753489**

"நான் இரண்டு ஏக்கரில் நெல் சாகுபடி செய்து செய்துவருகிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் மூலம் என் மொபைல் போனுக்கு [11-02-2011] வருடம் 2011 பிப்ரவரி மாதம் கொடுத்த செய்தியில் முக்கியமான ஒரு செய்தி தஞ்சாவூர் மாவட்டத்தில் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை பெறாதவங்க நாளை சனிக்கிழமை நடக்குற சிறப்பு முகாமில் கலந்துகொண்டு வாங்கிக்கலாம் என்று தகவல் கொடுத்தாங்க. இந்த செய்தியைக் கேட்டு முகாமில் கலந்துகொண்டு என் மகனுக்கு புகைப்பட அடையாள அட்டை வாங்கினேன். நான் கிராமத்தில் இருப்பதால் முக்கியமான செய்தியெல்லாம் உடனே தெரியாது. இப்ப உடனுக்கு உடன் செய்தியை தெரிந்து கொள்ள முடிகிறது. மொபைல்போன் மூலம் கொடுக்கும் செய்தி நன்றாக புரியும்படி சொல்றாங்க.

விவசாயிகள் போனின் புரோகிராம் நிகழ்ச்சியின் மூலம் விஞ்ஞானிகளை நேரடியாக தொடர்புகொண்டு பதில்களை தெரிந்து கொள்ளமுடிகிறது. போனின் புரோகிராம் நிகழ்ச்சி கால்நடைகள் பராமரிப்பு, முதலுதவி மூலிகை மருத்துவம் செய்வது பற்றிய நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கால்நடைப் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் புண்ணியமூர்த்தி அவர்கள் பதில்களை தெரிவித்தார்கள். நான் என்னுடைய மாடு கன்றுபோடும் நிலையில் இருக்கிறது. நாங்கள் பொதுவாக மாடு கன்று போட்டதும் நஞ்சு போடுவதற்கு மூங்கி தழை, அல்லது நானதட்டை போடுறது வழக்கம். அப்படி போட்டும் சில சமயங்களில் நஞ்சு போட அதிக நேரமாகிறதால் எனக்கு பயமாக இருக்கிறது. இதற்கு என்ன செய்வது? என்று கேட்டேன். அதற்கு டாக்டர் அவர்கள் பசு கன்று போடும் சமயம் பனிக்குடம் வெளியில் வந்ததும், பருத்திக்கொட்டை 1 கிலோ, அரிசி குருணை 1/4 கிலோ, கம்பு 1/2 கிலோ, எள் 1/4 கிலோ, எள் புண்ணாக்கு 1/2 கிலோ இவற்றை கொதிக்கும் தண்ணீரில் போட்டு வேகவைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

மாடு கன்று போட்டதும், கன்றினை மாட்டுக்கு அருகில் போட்டு கோழையை மாடு நக்கி எடுக்க விடவேண்டும். மாட்டின் காம்பினை சுத்தம் செய்து விட்டு மடியை கழுவிவிட்டு கன்றினை பால் குடிக்கவேண்டும். பிறகு வேகவைத்த பொருட்களை நன்கு ஆறவைத்து அதனுடன் பனைவெல்லம் அல்லது சர்க்கரை 1/2 கிலோ அளவுல சேர்த்து மாட்டுக்கு வைக்கவேண்டும். மாடு இவற்றை தின்றுவிட்டு அடுத்த 1 மணி நேரத்தில் நஞ்சினை போட்டிடும் என்று செய்தி சொன்னாங்க. என்னுடைய மாடு கன்று போட்டபோது Dr. புண்ணியமூர்த்தி அவர்கள் சொன்னபடி மேற்கண்ட மருந்து செய்து கொடுத்தேன். இவற்றையெல்லாம் மாடு தின்றுவிட்டு 1 மணி நேரத்தில நஞ்சு போட்டு விட்டது. இதை எனக்கு தெரிந்த கால்நடைகள் வளர்ப்பவர்களிடமும் தெரிவிக்கிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவி எண் 9344225965 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு தகவல் கேட்டாலும் உடனே பதில்களை தெரிஞ்சுக்கமுடியுது. விவசாயிகளுக்காக உதவி செய்யும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் திருமதி ரீட்டா.



## விவசாயி: திரு. சிவக்குமார்

**கிராமம்: கோனேரிராஜபுரம்**
**அலைபேசி: 9787201707**

“எங்களிடம் நான்கு ஏக்கர் நிலம் உள்ளது. இதில் நெல் மற்றும் எள், உளுந்து சாகுபடி செய்துவருகிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து என்னுடைய செல்போனுக்கு பேசும் வழியில் இரண்டு செய்திகளும், எழுத்துவழியில் இரண்டு செய்திகளும் கொடுக்கிறாங்க.

விவசாய செய்திகள், பயிர்க்காப்பீடு செய்வது, அரசு திட்டங்கள், மாடு, ஆடுகளுக்கு ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்த செய்தி, வானிலைத்தகவல்கள், சந்தை நிலவரம், மேட்டூர் நீர்மட்டம், திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறும் பயிற்சிகள், கூட்டங்கள் நடைபெறுவது பற்றியும் பயனுள்ள தகவல் தெரிவிக்கிறாங்க.

என்னுடைய மொபைல் போனுக்கு திருவையாறு கிராம வள மையத்தின் மூலம் மகாராஜபுரம் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் மெஷின் மூலம் நடவு செய்வதற்கு நாற்றங்கால் தயாரிப்பு பயிற்சி வகுப்பு நடைபெறுவது பற்றி செய்தி கொடுத்தாங்க. நடவுக்கு, விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காத இந்த காலத்தில் இயந்திரங்கள் மூலம் விவசாய பணிகள் செய்வதற்கு விவசாயிகளுக்கு பயிற்சி கொடுப்பது மிகவும் சிறப்பு. இந்த பயிற்சியில் நான் கலந்துகொண்டேன். திருந்திய நெல் சாகுபடி விவசாயத்தில் நல்ல அனுபவம் பெற்ற விவசாயி திரு.கணேசன் அவர்கள் நன்முறையில் விளக்கம் கொடுத்தாங்க.

நான் இந்த பயிற்சியில் கலந்துகொண்டு தொழில்நுட்பங்களை கடைபிடித்து பாய்நாற்றங்கால் தயாரித்து 2 ஏக்கரில் நடவு மெஷின் மூலம் வரிசை நடவு செய்துள்ளேன். பயிர்களும் நல்ல முறையில் வந்துள்ளது. சாதரண முறையில் நடவுப்பணி செய்ய ஆரம்பித்தோம் என்றால் வேலை செய்வதற்கு ஆட்களைப் பார்து அட்வான்ஸ் கொடுத்ததோட இல்லாமல், வேலைக்கு வருவாங்களா? மாட்டாங்களா? என்ற மன உளைச்சல் அதிகமாக இருக்கும். நாற்றெல்லாம் பறித்து வயலில் வைத்துவிட்டு நடவிற்கு ஆள் வரும் என எதிர்பார்த்து ஆட்கள் வராமல் போனதும் நடந்திருக்கிறது. ஆனால் தற்போது மெஷின் நடவு செய்ய திட்டமிட்டதும் மெஷின் உரிமையாளரிடம் நடவு தேதியை சொல்லி விட்டு, வரவேண்டிய நேரத்தை பதிவு செய்தால் சரியாக அந்த நேரத்திற்கு வந்து நடவுப்பணியை செய்துகொடுத்து கொடுத்தாங்க. மெஷினுக்கு ஒரு ஏக்கர் நடவு செய்ய வாடகை ரூ.2200/- தான். பதட்டம் இல்லாமல், மன உளைச்சல் இல்லாம வேலையை செய்யமுடியுது. மேலும் பயிர் சாகுபடி பற்றிய சந்தேகங்களை உதவி எண்ணுக்கு 9344225965 தொடர்பு கொண்டு கேட்கும்போது உடனே பதிலை தெரிந்துகொள்ளமுடியுது" என்கிறார் சிவக்குமார்.



## விவசாயி: திரு. சிவ. மருதவாணன்

**கிராமம்: விளாங்குடி**
**அலைபேசி: 9442317684**

“நான் நான்கு ஏக்கரில் நெல், உளுந்து, எள் சாகுபடி செய்து வருகிறேன். எனது மொபைல் போனுக்கு திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்து வாய்ஸ் செய்தி இரண்டும், எழுத்து வடிவிலான செய்தி இரண்டும் தினமும் கொடுத்து வருகிறார்கள். மாதத்தில் இரண்டு முறை போனின் புரோகிராம் என்ற நிகழ்ச்சி நடத்துவாங்க. எள் சாகுபடி பற்றியும் அதில் ஏற்படும் பூச்சி நோய்கள் கட்டுப்படுத்துவது பற்றிய போனின் புரோகிராம் நாளை நடக்கப்போவது பற்றியும் அதில் நிகழ்ச்சி நடபெறும் அன்றைக்கு காலையில் 9344225965 நம்பருக்கு கேள்விகளை சொல்லி பதிவு செய்துக்கணும் என்று சொன்னாங்க.

நான் என்னுடைய கேள்வியாக "தற்போது எள் அறுவடை செய்துகொண்டிருக்கிறேன். களத்தில் எள் செடிகளை போர் வைத்து வருகிறேன். அறுவடை செய்த எள்ளில் அதிகமாக கருப்புநிற பூச்சிகள் வருகிறது. இதை எப்படி கட்டுப்படுத்துவது? என்று கேட்டிருந்தேன்.

அன்று மாலை 3 மணிக்கு விவசாய ஆலோசகர் திரு லெட்சுமிநாராயணன் என்னுடைய மொபைல் எண்களுக்கு அழைத்து பதில் தெரிவித்தார். அதில் அறுவடைசெய்த எள்ளிற்கு எக்கடையான் என்ற கருப்பு பூச்சி வரும். இதனை அவசியம் கட்டுப்படுத்தவேண்டும். இதனை கட்டுப்படுத்தவில்லையென்றால் எள் கூடாகிவிடும். இதற்கு போரைச்சுற்றி இடைவெளி இல்லாமல் பயிருக்கு சற்று தள்ளி லிண்டேன் பூச்சி மருந்தினை வட்ட வடிவத்திலோ அல்லது வேறு எந்த கோலத்திலோ கோலம்போடுவது போல் போட்டு வைத்தல் அவசியம். இதன்மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்னு சொன்னங்க. அவர் சொன்னபடி செய்தேன். பூச்சிகள் எல்லாம் இறந்துபோனது. எள் போர் வைத்து அடித்து ஒரு ஏக்கருக்கு 250 கிலோ வீதம் எள் கிடைத்தது. இதன் மூலம் 5000 ரூபாய் எனக்கு கிடைத்திருக்கிறது.

சென்ற வருடம் இந்த தகவல் தெரியாமல் போனதால் ஒரு ஏக்கரில் அறுவடை செய்து வைத்த எள், பூச்சி பாதிப்பினால் பாதிக்கும் மேல் பூச்சி அரித்து பதறாகிப்போனது. இந்த வருடம் சரியான நேரத்தில் போனின் புரோகிராம் நிகழ்ச்சியில் கலந்துகிட்டு பதில் தெரிஞ்சுகிட்டு மருந்து அடித்ததால் எள்ளில் எந்த பாதிப்பும் இல்லாமல் பாதுகாக்க முடிந்தது. எனக்கு பல வகையில் தகவல் கொடுத்து உதவிவரும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றி தெரிவிச்சுக்கிறேன்" என்கிறார் மருதவாணன்.



விவசாயி: திரு. விஜயகுமார்

கிராமம்: புனல்வாசல்
அலைபேசி: 9865753829

“நான் புனல்வாசல் கிராமத்தில் வசித்துவருகிறேன். திருவையாறு சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் என் செல்போனுக்கு முக்கியமான பயனுள்ள செய்திகள் கொடுக்கிறாங்க. இதில் விவசாய செய்திகள், கால்நடை செய்திகள், வேலைவாய்ப்பு செய்திகள் கொடுக்கிறாங்க. வேலைவாய்ப்பு செய்திகள், பயிற்சிகள் கொடுப்பது பற்றியும், தெரிவிப்பதையும் எனது நண்பர்களுக்கு உடனடியாக தெரிவிக்கிறேன். தஞ்சாவூரில் பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தில் இலவச தொழிற்பயிற்சி கொடுப்பது பற்றி தெரிவித்தார்கள். அதனை எங்கள் ஊரில் நண்பர்களிடம் தெரிவித்து பயிற்சியில் கலந்துகொள்ளச் சொன்னேன். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, பயிற்சிகள், உதவித்தொகை பெற சரியான நேரத்தில் தகவல் சொல்கிறார்கள். நன்றி" என்கிறார் விஜயகுமார்.



விவசாயி: திரு. க. துரைராஜ்

கிராமம்: தில்லைஸ்தானம்
அலைபேசி: 9751778622

“நான் வாழைக்கன்று பூவன் இரகம் நடவு செய்து 5 மாதம் ஆகிறது. வாழைக்கொள்ளையில் குறுக்கு, நெடுக்கு சால் டிராக்டர் மூலம் ஏர் ஓட்ட வேண்டிய தருணம், 05-01-11 அன்று ஏர் ஓட்ட திட்டமிட்டு வண்டிக்கு சொல்லிவிட்டு, வேலைக்கு ஆட்களுக்கும் சொல்லியிருந்தேன். 4-1-11 அன்று வானிலை அறிக்கையில் 5-1-11 அன்று 24.4 மி.மீட்டர் மழை பெய்யும் என செல்போனில் தகவல் வந்திருந்தது. உடனே ஏர் ஓட்டுபவரிடமும், வேலை ஆட்களிடமும் சென்று ஜனவரி 5 ம் தேதி அன்று வேலை வேண்டாம், அடுத்த நாள் செய்யலாம் என சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதேபோல் அன்று நல்ல மழை வந்தது. மழை, தண்ணீர் இருந்தால் பார் பிடித்துகொண்டு ஏர் ஓட்ட சிரமமாக இருக்கும்.

அறிக்கை பார்க்காமல் வண்டிக்கு சொல்லி இருந்தால் வேலையே செய்யாமல் வண்டிக்கு வாடகையும், வேலை ஆட்களுக்கு கூலியும் கொடுக்கவேண்டியிருக்கும். டிராக்டர் உழவு வாடகை 3 ஏக்கருக்கு 1800 ரூபாயும், ஆள் கூலி 10 ஆட்களுக்கு 1500 ரூபாயும், மொத்தமாக 3300 ரூபாய் வானிலை செய்தி கேட்டதால் மிச்சமானது" என்கிறார் துரைராஜ்.

## விவசாயி: திரு. ஸ்டாலின்



**கிராமம்: இராஜேந்திரம்**
**அலைபேசி: 9361363735**

"திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் கடந்த ஒரு வருடமாக விவசாயிகளுக்கு மொபைல்போன் மூலம் தகவல் வழங்கி வருகிறது. அந்த திட்டத்தின் மூலம் என் மொபைல்போனுக்கும் பயனுள்ள பல தகவல் வந்துகொண்டிருக்கிறது. விவசாய செய்திகள், கால்நடை பராமரிப்பு செய்திகள், அரசு நலத்திட்டங்கள் போன்றவற்றை தெரியப்படுத்துக்கிறார்கள்.

என் வீட்டு தோட்டத்தில் ஐந்து வருட வயதில் 30 தென்னை மரங்கள் உள்ளன இதில் சில மரங்களில் தென்னை மட்டைகளில் ஓலைகள் வெட்டப்பட்டு இருந்தது. அப்போது என் மொபைல்போனுக்கு தென்னையில் காண்டாமிருக வண்டு ஓலைகளை வெட்டி விடுவது பற்றியும் இதனைக்கட்டுப்படுத்த ஒரு கிலோ ஆமணக்கு பிண்ணாக்கை ஐந்து லிட்டர் தண்ணீரில் ஊர வைத்து கரைத்து அதில் 10மில்லி மானோகுரோட்டோபாஸ் பூச்சிகொல்லியையும் கலந்து அதை ஐந்து சிறிய மண்பானைகளில் எடுத்து ஒரு ஏக்கரில் ஐந்து இடங்களில் மண்பானையின் வாய்புரம் தரைக்குமேல் தெரியுமாறு புதைத்து வைக்கவும். இரவு நேரங்களில் காண்டாமிருக வண்டுகள் இந்த பானையில் உள்ள ஆமணக்குப் பிண்ணாக்கின் வாசனைக்கு கவரப்பட்டு எளிதில் அழிந்து விடும்.

தென்னந்தோப்பு வைத்திருப்பவர்கள் அனைவரும் இந்த முறையை ஒரே நேரத்தில் செய்தால் தான் முழு பலன் கிடைக்கும் என்று சொன்னார்கள். காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்த சொன்ன வழிமுறைகள் தெளிவாக புரிந்ததால் அதன்படி எங்கள் வீட்டு தோட்டத்தில் மூன்று இடத்தில் மருந்து கலந்த பானைகளை வைத்தேன். மருந்து வைத்த இரண்டு நாள் வரை எந்த பூச்சியும் விழவில்லை. பிறகு மூன்றாம் நாளில் இருந்து கருப்பு நிறத்தில் தலையில் கொம்புடன் பெரிய வண்டுகள் விழுந்துகிடந்தது. அதை எடுத்து அழித்தேன். இதனால் தென்னை ஓலைகளில் வெட்டப்படுவது குறைந்தது. காண்டாமிருக வண்டுகளை அழிக்க முடிந்தது. தென்னங்கன்றுகளை காண்டாமிருக வண்டு தாக்கினால் மரம் காய்ந்து விடும். மரம் தாக்கப்பட்டால் வளர்ச்சி குன்றுவதுடன் மகசூல் குறையும் என்று சொன்னாங்க. காண்டாமிருக வண்டுகளை அழித்துவிட்டதால் தென்னை மரத்தை காப்பாற்ற முடிந்தது. எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் ஸ்டாலின்.



**விவசாயி: திரு. வீரமணி**

**கிராமம்: புனல்வாசல்**
**அலைபேசி: 9600878144**

“நான் தாளடி நடவு செய்துள்ளேன். வயலுக்கு முதல் களை எடுத்து மருந்து போட போனேன். ம.சா. சுவாமிநாதன் மற்றும் நபார்டு வங்கி இணைந்து வழங்கும் மொபைல் செய்தியில் வானிலை அறிக்கை எனக்கு தொடர்ந்து வருவதால் வானிலை அறிக்கையை படித்து அதன் படி வயல்பணிகளை மேற்கொள்ளுவது வழக்கம். அன்றைய செய்தியில் அடுத்த நாள் 22-12-2010 அன்று நல்ல மழை பெய்யும் என செய்தி வந்தது. களை எடுப்பதுடன் நிறுத்திக்கொண்டேன். வாங்கிய மருந்தை அப்படியே வைத்துக்கொண்டேன். அறிக்கை சொன்ன அன்று நல்ல மழை பெய்தது. மருந்து தெளித்திருந்தால் வீணாகிப்போயிருக்கும். தண்ணீருடன் அடித்துப்போய் நிலம் பாழ்பட்டிருக்கும். அதன்பின்பு மழை இல்லாத நாள் பார்த்து மருந்து போட்டேன். மொபைல் செய்தியால் இரண்டு ஏக்கருக்கான பூச்சிமருந்து செலவு 800 ரூபாய், ஒரு ஆள் கூலி 200 ரூபாய் என 1000 ரூபாய்க்கான செலவு தவிர்க்கப்பட்டது" என்கிறார் வீரமணி.



**விவசாயி: திரு. சுரேஷ்குமார்**

**கிராமம்: பெரும்புலியூர்**
**அலைபேசி: 9786543438,**

“நான் திருவையாறு அடுத்து பெரும்புலியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் எட்டு ஏக்கர் நிலம் உள்ளது. இதில் நெல், உளுந்து, எள் பயிர் சாகுபடி செய்துவருகிறேன். திருவையாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் எனது மொபைல்போனுக்கு செய்திகள் வந்துகொண்டிருக்கிறது. இதில் விவசாயத்தகவல்கள், கால்நடை வளர்ப்பு தகவல், வானிலை அறிக்கை, மேட்டூர் நீர் மட்டம் போன்ற தகவல்கள் வந்துகொண்டிருக்கிறது. வந்து கொண்டிருக்கும் தகவல்கள் அனைத்தும் முக்கியமான தகவல்கள். தற்போது நாற்றங்கால் தயாரிப்பு செய்தியும், குறுவை நடவு பற்றிய செய்தியும் தொடர்ந்து வருகின்றன. தற்போது குறுவையில் ஒற்றை நாற்று நட சொல்லி அறிவுறுத்துகிறீர்கள். எங்கள் பகுதியில் ஒற்றை நாற்று நடவிற்கு ஆட்கள் கிடைக்கவில்லை. அதனால் சாதா நடவு தான் செய்திருக்கிறேன்.

தாட்கோ அலுவலகத்தின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன இளைஞர்களுக்கு டிரைவிங் பயிற்சி அளிப்பது பற்றிய செய்தியும் வந்தது. இந்த பயிற்சியில் நான் கலந்துகொள்ள இருக்கிறேன். ஆகஸ்ட் மாதம் 20ம் தேதிக்குள் விண்ணப்பிக்கச்சொல்லி இருக்கிறார்கள். இன்று சான்றிதழ்களுடன் தாட்கோ அலுவலகத்திற்கு செல்ல இருக்கிறேன். பயனுள்ள செய்திகளை தொடர்ந்து தெரியப்படுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" என்கிறார் சுரேஷ்குமார்.















M S Swaminathan Research Foundation
Third Cross Street, Taramani Institutional Area
Chennai 600 113
Tel +91 44 2254 2791 / 2254 1229,;
Fax +91 44 2254 1319
nva@mssrf.res.in
www.mssrf.org; www.mssrf-nva.org